133

# வக்கீல்

பொதுமக்களுக்கான தமிழ் சட்டப் பத்திரிகை

133
2-55



1955

இதழ் 2

(மார்ச்சு—ஏப்ரல்)

பொது மக்களுக்குத் தேவை யான புதிய சட்டங்களையும் கோர்ட்டு தீர்ப்புகளையும் மற் றும் பல சட்ட விஷயங்களையும் எளிய தமிழ் நடையில் விளக் கும் மாத வெளியீடு.

**இந்த இதழில்**

**1955-ம் வருடத்திய விவசாயிகள் கடன் தவணைச் சட்டம் தமிழிலும் ஆங்கிலத்திலும்**

**விலை அணா 4.**

(All Rights Reserved.)

...ரெஸாக்...

THE VAKIL ✶ TAMIL LAW MAGAZINE

# "வக்கீல்"

## பொது மக்களுக்கான

## உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை

குறிப்பு: "வக்கீல்" பத்திரிகை 1949 ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. மாதம் ஒருமுறை பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. "வக்கீல்" பொது மக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய விதிகளையும் எளிய தமிழில் விளக்கம் செய்யும் ஒரு உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை. வழக்கும்—தீர்ப்பும்; கேள்வி—பதில்; வரிகள்; தொழிலாளர் பகுதி போன்ற பல அம்சங்கள் உண்டு.

### ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B.A., B.L.,
" G. நாகராஜ பத்தர், B.A., B.L.,
" V. தியாகராஜன், B.A., B.L.,
" A. பார்த்தசாரதி நாயுடு, B.A., B.L.,
" S. சாம்பசிவய்யர், B.A., B.L.,
" T. S. வெங்கடராமன், B.A., B.L.,
" R. கிருஷ்ணமாச்சாரி, B.A., B.L.,
" R. கோபாலசாமி, B.A., B.L.,
" C. R. வீரராகவன், M.A., B.L.,
" R. கிருஷ்ணமூர்த்தி, B.A., B.L.,
" P. சுந்தரேசய்யர், B.A., B.L.,
" V. S. விஜயராகவாச்சாரி, B.A., B.L.,

[ஆசிரியர்]

## "வக்கீல்" சந்தா விபரம்

தனிப்பிரதி அணா 4. வருட சந்தா ரூ. 3. டை வெளி நாடு இலங்கை உள்பட ரூ. 5. ஆயுள் சந்தா ரூ. 100.

சந்தாதார்கள் கவனிக்கவும்:—வருடச் சந்தாதார்களுக்கு 12 மாத இதழ்கள் அனுப்பப்படும். "வக்கீல்" பிரசுரங்கள் என்ற தனிச் சட்டப் புத்தகங்களை வருடச் சந்தாதார்கள் சலுகை விலையில், அதாவது அச்சடித்த விலையில் ரூ. 1க்கு அணா 4 தள்ளி, பெற்றுக்கொள்ளலாம். ஆயுள் சந்தாதார்களுக்கு எல்லா "வக்கீல்" இதழ்களும் எல்லாப் புத்தகங்களும், அனுப்பப்பட்டு வரும்.

சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:-

மானேஜர் "வக்கீல்" காரியாலயம்
தபால் பெட்டி 26, கும்பகோணம்
(தென் இந்தியா)
என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

## "வக்கீல்"

(விளம்பர விகிதம்)

ஒரு முறை பிரசுரம் செய்ய

| | |
|---|---|
| பின் அட்டை முழுப் பக்கம் (இரண்டு கலர்) | ரூ. 100 |
| உள் அட்டை முழுப் பக்கம் | ரூ. 80 |
| உள் பக்கம் முழுப் பக்கம் | ரூ. 60 |
| டை ... அரைப் பக்கம் | ரூ. 35 |
| டை ... கால் பக்கம் | ரூ. 20 |
| ஒரு காலம் - அங்குலம் | ரூ. 5 |

(தொடர்ச்சியாக 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 10% குறைக்கப்படும்.)

# "வக்கீல்" அறிவிப்பு.

## பிரசுரத்தேதி

"வக்கீல்" பத்திரிகை மாதம் ஒரு முறை பிரசுரம் செய்யப்பட்டு வரும். ஆனால் ஒவ்வொரு மாதமும் விஷயங்களை ஒட்டியும், சில முக்கிய சட்டங்களோ, மசோதாக்களோ அம்மாதத்தில் வரக்கூடியவையாக இருந்தால் அவை வருவதை எதிர்பார்த்தும் "வக்கீல்" பிரசுரம் செய்யப்படும்.

## வருடச் சந்தாதார்கள்

வருடச் சந்தாதார்களுக்கு ரூ. 3-க்கு 12 இதழ்கள் கட்டாயமாக அந்தந்தப் பிரசுரத் தேதியிலேயே தபால் மூலம் அனுப்பப்படும். பத்திரிகை ஏன் வரவில்லை என்று எந்த வருடச் சந்தாதாரும் அவசரப்பட்டுக் கடிதம் எழுதவேண்டிய அவசியமில்லை. ஆனால் சந்தாத் தொகை தீர்ந்து விட்டால், புதிய சந்தாத் தொகை ஆபீசுக்குக் கிடைக்கும் போதுதான் மறுபடியும் பத்திரிகை அனுப்ப முடியும். சந்தா இருக்கும் போதே, பத்திரிகை வரவில்லை என்ற சந்தேகம் தோன்றினால்பட்டில் சந்தா நம்பரைக் கண்டு கடிதம் எழுதவும். சந்தா நம்பர் இல்லாத கடிதங்களைக் கவனிக்கக் காலதாமதம் ஏற்படும்.

"வக்கீல்" பத்திரிகைக்குச் சந்தாதார்கள் அனுப்பவேண்டிய சந்தாத் தொகையைக் கீழே கண்ட விலாசத்திற்கு மணியார்டர் மூலம் அனுப்பவும்; அல்லது நேரில் ஆபீசில் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளவும். "வக்கீல்" பத்திரிகைக்குச் சந்தா சேர்க்கவும், ரசீது கொடுக்கவும், தொகை வசூல் செய்யவும் வேறு எவருக்கும் அதிகாரம் இல்லை.

## ஏஜண்டுகள்

ஏஜன்சி விதிகளின்படி டிபாசிட் அல்லது முன் பணம் உள்ள ஏஜண்டுகளுக்கு மட்டில் "வக்கீல்" பத்திரிகை பிரசுரம் செய்யப்படும் தேதியிலேயே அனுப்பப்படும். முன் பணமில்லாத ஏஜண்டுகள் தாமதமாகப் பணம் அனுப்பினால், அத்தொகை ஆபீசுக்குக் கிடைத்த பிறகு, அப்பொழுது அம்மாத இதழ் கைவசம் இருந்தால் அவர்களுக்கு அனுப்பப்படும். பிரதிகள் தீர்ந்துவிட்டால் அவர்களுக்கு அடுத்த மாத இதழ்கள் தான் அனுப்பப்படும். முன் பணம் இருப்பதாக நினைத்துக்கொண்டு ஆபீசுக்குக் கடிதம் எழுதும் ஏஜண்டுகள், அத்துடன் அவர்களுடைய கணக்கு நகலும் அனுப்பினால் அதை எங்கள் கணக்குடன் ஒத்துப்பார்த்துக்கொண்டு பதில் எழுதுவது சாத்தியமாகும்.

மானேஜர்,
"வக்கீல்" தமிழ் சட்டப் பத்திரிகை
தபால் பெட்டி 26 : : கும்பகோணம் (S. I.)

வெண்சங்கு நருமண சீயக்காய்த் தூள்

குணம்
மணம்
சுத்தம்
ஆரோக்கியம்
சிக்கனம்
உடையது.

நருமண சீயக்காய்த்தூள் REGD. No. 13817.

உரிமை:
S. பெத்தண்ண நாடார்
.. கீழவாசல்-தஞ்சாவூர்..

ஆடைகளை அழகு பெறச் செய்வது
★ அன்னகிளி ★
சோப்
— தயாரிப்பவர் —
சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்
P. B. No. 22 :: தஞ்சாவூர்.

மூர்த்தி ஸ்டோர்
செம்பனார்கோவில்
(மாயூரம் தாலுக்கா)

எங்களிடம் புது சைகிள்களும், சைகிள் சாமான்கள், பெட்ரோமாக்ஸ் லைட் சாமான்கள், தையல் மிஷின் சாமான்கள் & கிராம போன் சாமான்களும் விலை நயமாய் கிடைக்கும்.

சைகிள்களின் எல்லாவிதமான ரிப்பேர்களும் செய்யப்படும்.

உரிமையாளர்,
T. N. ராமமூர்த்தி.

"வக்கீல்"

# பொருள் அடக்கம்

மலர் 7 *March - April 1955* இதழ் 2

ஆந்திரத் தேர்தல் 4

புதிய சட்டங்கள் 5

வழக்கும் தீர்ப்பும்

* லைசென்சு கேட்கும் மனுவை 30 நாட்கள் சழித்து முனிசிபாலிடியார் நிராகரித்தனர். லைசென்சு கொடுக்கப்பட்டதாகவே சட்டம் பாவிக்கும். 7

* தம்மிடம் வேலை செய்யும் ஒரு சிப்பந்தியை இஷ்டப்படி நீக்கி விடும் உரிமை, முதலாளிக்குக் கிடையாதா? தொழில் தகராறு சட்டத்தில் ஏற்பட்ட வழக்கில் ஹைகோர்ட்டின் தீர்ப்பு. 7

கூட்டுறவுச் சட்டமும் விதிகளும் 9

கேள்வியும்—பதிலும் 10

சென்னை விவசாயிகள் கடன் தவணைச் சட்டம் (1955) 13

The Madras Indebted Agriculturists (Repayment of Debts) Act 1955. 19

187737
சென்னை-600 003

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 7 மார்ச்சு—ஏப்ரல் 1955 இதழ் 2

# ஆந்திரத் தேர்தல்

சமீபத்தில் ஆந்திர ராஜ்யத்தில் நடந்த பொதுத் தேர்தலின் விளைவானது உலகத்திலுள்ள பல வல்லரசு நாடுகளின் கவனத்தையும் கவர்ந்து விட்டது. ஆசியாவானது கொஞ்சம் கொஞ்சமாகக் கம்யூனிஸ்டு பிரதேசமாகி வருவதாக அமெரிக்காவும் வேறு சில ஐரோப்பிய நாடுகளும் கருதி வருகின்றனர். இந்தியாவே தான் ஆசியாவுக்கு வழி காட்டுமென்றும், இந்தியாவுக்கு வழி காட்டுபவர் நேருதான் என்றும் அவர்கள் அறிவார்கள். நேருவின் கொள்கைகளும் செய்கைகளும் அமெரிக்கர்களுக்கு ஒரு புதிராகவே இருந்தது. இந்தியாவில் ஆந்திர ராஜ்யந்தான் கம்யூனிஸ்டுகளின் கோட்டை எனலாம். அப்படி இருக்கும்போது ஆந்திரப் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் எப்படி ஜயித்தது? அங்கே கம்யூனிஸ்டுகள் ஏன் படுதோல்வி அடைந்தனர்?

இதற்குப் பதில் ஒன்றுதான். இப்போது ஆந்திரத்தில் ஜயித்தது பழைய காங்கிரஸ் அல்ல. இப்போது ஜயித்திருப்பது ஆவடியில் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு புதிய சக்தியாகும். பழைய காங்கிரசின் எலும்புக் கூட்டையே வைத்துக் கொண்டு அதில் இப் புதுச் சக்தியைப் புகுத்திய மந்திரவாதி நேருவேதான்.

கம்யூனிசக் கொள்கைகளை ஆசியாவில் பரவவிடாமல் தடுக்க அமெரிக்காவானது சியாங்கே ஷேக் என்ற ஒரு பொம்மைக்குக் கோடிக் கணக்கான ஆயுதங்களையும் யுத்த தளவாடங்களையும் கொடுத்து உதவினர். அதன் விளைவாகவே சீனுவானது வேகமாகக் கம்யூனிஸ்டு நாடாயிற்று.

நேருவின் வழி வேறு. நேரு கம்யூனிசக் கொள்கைகளை அறவே வெறுக்கவில்லை. உலகில் சுத்த கம்யூனிஸ்டு நாடுகளுடன் அக்கொள்கையை ஏற்காத நாடுகளும் ஒருவருக்கொருவர் சண்டையில்லாமல் அவரவர்கள் அவரவர் வழியே வாழ்ந்து வந்தால் என்ன என்று நேரு கேட்டார். இது அமெரிக்காவுக்குப் புரியவே இல்லை. கம்யூனிஸ்டுகளின் லட்சியங்களின் பெரும்பான்மையை, நாசவேலை செய்யாமலும் குழப்பமில்லாமலும் ஒரு சாத்வீக முறையிலேயே அடையலாம் என்று நேரு சொன்னர். இது ரஷ்யாவுக்குப் புரியவில்லை.

ஆனல் நேரு காண்பிக்கும் பாதை ஆந்திரர்களுக்குப் புரிந்துவிட்டது; இந்தியாவுக்கும் புரிந்துவிட்டது.

# புதிய சட்டங்கள்

## சுருக்கியும் - வரிசையாகவும்

### 1954-ஆம் வருடத்திய சென்னைச் சட்டங்கள்

[சென்னைச் சட்ட மன்றத்தாரால் நிறைவேற்றப்பட்டவை. சட்டம் சென்னைச் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட தேதி பிராக்கெட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.]

**27. சென்னை இந்து அறநிலையப் பாதுகாப்புச் சட்டத் திருத்தம்,**

Madras Hindu Religious and Charitable Endowments Amendment Act 1954 இத் திருத்தச் சட்டத்தின் ஷரத்துக்கள் 1954 "வக்கீல்" இதழ் 10-ல் விவரமாக விளக்கப்பட்டுள்ளன.

**28. சென்னை 'எஸ்டேட்' நில வாரக் குறைப்புச் சட்டத் திருத்தம்.**

Madras Estates Land (Reduction of Rent) Amendment Act 1954. (4-10-1954) மத ஸ்தாபனங்களுக்கும், கல்வி அல்லது தர்ம ஸ்தாபனங்களுக்கும் சேரவேண்டிய மேல்வாரத் தொகையானது இச் சட்டப்படி குறைக்கப்பட்டாலும், அந்த ஸ்தாபனங்களுக்கு அதனால் ஏற்படும் நஷ்டத்தை சர்க்காரே ஈடு செய்து கொடுப்பது பற்றிய செக்ஷன் 5 திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது.

**29. எலெக்ட்ரிக் சப்ளை கம்பெனிகளை, சர்க்காரே எடுத்துக் கொள்வது பற்றிய சட்டம்.**

Madras Electricity undertakings Acquisition Act 1954. (13—10—1954) இது சம்பந்தமான 1949-ஆம் வருடத்திய சட்டம் ரத்துச் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக இச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது.

**32. சென்னை வேடிக்கை வரிச் சட்டத் திருத்தம்.**

Madras Entertainments Tax Amendment Act 1954. (12—1—1955) வேடிக்கைகளுக்கு வரி விதிக்கும் சட்டம் 1—8—1949 முதல் அமுலுக்கு வந்தது. ஆனால் அச் சட்டம் 31—3—1955 வரைதான் அமுலில் இருக்குமென்று செக்ஷன் 1 (3) என்ற ஒரு ஷரத்து இருந்தது. அந்த ஷரத்து இப்போது இச் சட்டத்தால் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. அதாவது இச் சட்டம் இனி நிரந்தரமாக இருக்கும்.

**33. சென்னை நாடகச் சட்டம்.**

Madras Dramatic Performances Act 1954. (12—1—1955) இச்சட்ட ஷரத்துக்கள் "வக்கீல்" இதழில் விவரமாக விளக்கப்பட்டுள்ளன.

**34. சென்னை ஜமீன் இனும் ஒழிப்புச் சட்டத் திருத்தம்.**

Madras Estates Abolition and Conversion into Ryotwari Amendment Act 1954. (19-1-1955.) சென்னை ராஜ்யத்திலுள்ள ஜமீன் இனும்களை ஒழித்து அவைகளை ரயத்துவாரியாகச் செய்யும் சட்டம் 1948-ல் இயற்றப்பட்டது. அச்சட்டத்தில் இப்போது சில முக்கிய திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இத்திருத்தங்களாவன:—

(1) ஜமீன் இனும் ஒழிப்புச் சட்ட ஷரத்துக்கள் ஒவ்வொரு குறிப்பிட்ட ஜமீன் அல்லது இனும் எஸ்டேட்டுக்கும் எந்தத் தேதி முதல் அமுலுக்கு வருமென்று அறிக்கை மூலம் தேதி குறிப்பிட சர்க்காருக்கு செக்ஷன் 1 (4) என்ற ஷரத்தால் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் சர்க்கார் அறிக்கை செய்வதை கோர்ட் உத்தரவு மூலம் மேல் நடவடிக்கைகள் தடை செய்யப்பட்டிருந்தால், அவ்விதத் தடை நீங்கி, எந்தத் தேதி முதல் அந்த எஸ்டேட்டானது தொடர்ந்து சர்க்காரின் சுவாதீனத்தில் வருகின்றதோ, அத்தேதி முதல்தான் அந்த எஸ்டேட் சம்பந்தப்பட்ட வரையில் இச் சட்டம் அமுலுக்கு வருமென்று இப்போது ஒரு ஷரா சேர்க்கப்பட்டிருக்கிறது. "அறிக்கைத் தேதி" என்பதும் அத்தேதியாகவே பாவிக்கப்படும். இத்திருத்தம் 19-4-1949 முதல் அமுலில் இருப்பதாகவும் பாவிக்கப்படும்.

(2) இச்சட்டத்தின் செக்ஷன் 9 என்ற ஷரத்தின்படி ஒரு இனும் கிராமமானது இச் சட்டப்படி திறப்பாக மாற்றப்படவேண்டிய இனும் கிராமமா அல்லவா என்பதை செட்டில்மெண்ட் ஆபீசர் விசாரித்து முடிவு செய்ய வேண்டும். செட்டில்மெண்ட் ஆபீசருடைய உத்தரவினால் பாதிக்கப்பட்டவர், உத்தரவுத் தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் அப்பீல் செய்யலாமென்றும்; இரண்டு மாத அப்பீல் கெடு முடிந்தும்கூட டிரிபுனல் கோர்ட்டார் இஷ்டப்பட்டால் அதற்குப் பிறகும் அப்பீலை

ஏற்றுக் கொள்ளலாமென்றும் செக்ஷன் 9 (4) என்ற ஷரத்தில் இருந்தது. அந்த ஷரத்தானது இப்போது திருத்தப்பட்டிருக்கிறது. செட்டில்மெண்ட் ஆபீசரின் உத்தரவின்பேரில், அப்பீல் செய்யும் உரிமை புதிதாக சர்க்காருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. செட்டில்மெண்ட் ஆபீசருடைய உத்தரவுத் தேதியிலிருந்து அப்பீல் செய்யச் சர்க்காருக்கு ஒரு வருட கெடு கொடுக்கப்பட்டிருக்கிறது. இது வரையில் ஏற்பட்ட செட்டில்மெண்ட் ஆபீசரின் உத்தரவுகளின் தேதியிலிருந்து ஒரு வருடம் கடந்துபோயிருந்தாலும், அவ்வித உத்தரவுகளின்பேரில், இத் திருத்தச் சட்டம் அமுலுக்கு வந்த தேதியாகிய 19-1-1955 லிருந்து ஒரு வருடத்திற்குள்ளும் சர்க்கார் அப்பீல் செய்யலாம். டிரிபுனல் இஷ்டப்பட்டால் தனி நபருக்கும் சரி சர்க்காருக்கும் சரி அப்பீல் கெடுத் தேதியிலிருந்து 6 மாதம் வரை அப்பீல் கெடுவை நீடிக்கலாம். தனி நபர் போடும் அப்பீல்களைப்பற்றி சர்க்காருக்கும் நோட்டீசு அனுப்பப்படும்.

(3) செக்ஷன் 10-படி ஒரு 'அண்டர் டெனியூர் எஸ்டேட்' விஷயமாக செட்டில்மெண்டு ஆபீசர் செய்யும் உத்தரவுகளின் பேரிலும் மேலே கண்ட கெடுவுக்குள் டிரிபுனலுக்கு அப்பீல் செய்ய சர்க்காருக்கு இப்போது உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது.

(4) ஒரு ஜமீன் அல்லது இனும் கிராமத்தில் எந்த எந்த நிலங்கள் சம்பந்தப்பட்டவரையில் ஜமீன்தார் பெயருக்கோ, இனும்தார் பெயருக்கோ ரயத்துவாரிப்பட்டா கொடுக்கப்படவேண்டுமென்பதை செட்டில்மெண்ட் ஆபீசர்தான் செக்ஷன் 15-ன்படி விசாரித்து முடிவு செய்யவேண்டும். செட்டில்மெண்ட் ஆபீசரின் உத்தரவால் பாதிக்கப்பட்டவர் 2 மாதங்களுக்குள் டிரிபுனலுக்கு அப்பீல் செய்யலாமென்று மட்டில் இதில் இருந்தது. இப்போது இவ்வித உத்தரவுகளின் பேரிலும் முன்கண்ட கெடுவுக்குள் டிரிபுனலுக்கு அப்பீல் செய்ய சர்க்காருக்கும் உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்பீல் கெடுவை 6 மாதம் வரை நீடிக்கவும் டிரிபுனல் கோர்ட்டுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதுடன், செட்டில்மெண்டு ஆபீசரின் உத்தரவானது மோசடியாலோ தவறுதலாலோ ஏற்பட்டிருப்பதாக டிரிபுனலுக்குத் தோன்றினால், யாதொரு கெடு நிபந்தனையுமில்லாமல் சர்க்கார் அப்பீலை ஏற்றுக்கொள்ளவும் டிரிபுனலுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

(5) வாரக் குறைப்புச் சட்டப்படி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கும் மேல் வாரத் தொகைகளை விட ஒரு ஜமீன்தாரோ இனும்தாரோ ரயத்துக்களிடமிருந்து, அதிகமாக வசூல் செய்திருந்தால், அவ்விதம் அவர்கள் அதிகமாக வசூல் செய்து ரயத்துக்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படவேண்டியதாக இருக்கும் தொகைகளை, அவர்களுக்கு சர்க்காரால் கொடுக்கப்படவேண்டிய நஷ்ட ஈடுத் தொகைகளிலிருந்து பிடித்துக்கொண்டு பாக்கியை மட்டில் அவர்களிடம் கொடுக்கும்படி இச்சட்டத்தின் செக்ஷன் 50, செக்ஷன் 54 இந்த ஷரத்துக்கள் திருத்தி அமைக்கப்பட்டிருக்கின்றன.

### 35. 'பார் கவுன்சில்' சட்டத் திருத்தம்.

Indian Bar Councils Madras Amendment Act 1954. (19—1—1954) 'பார் கவுன்சில்' என்ற வக்கீல் சங்கச் சட்டப்படி சென்னை ஹைகோர்ட்டில் பதிவு செய்துகொண்டிருக்கும் அட்வகேட்டுகள் யாவரும் 'பார் கவுன்சில்' அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதில் 'வோட்' போட உரிமை இருந்தாலும், இப்போது ஆந்திர ராஜ்யத்திற்குத் தனியாக ஒரு ஹைகோர்ட் ஏற்பட்டு விட்டபடியால், இனி சென்னை ராஜ்ய 'பார் கவுன்சில்' தேர்தல்களில் சாதாரணமாகச் சென்னை ராஜ்யத்தில் வசித்து தொழில் நடத்தாதவர்கள் "வோட்" போட அருகதை அற்றவர்கள் என்று அச் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது.

### 36. சென்னை அத்தியாவசியப் பண்டங்களைப் பற்றிய தாற்காலிகக் கட்டுப்பாடுச் சட்டத் திருத்தம்.

Madras Essential Articles Control and Requisitioning Temporary Powers Amendment Act 1954 (19—1—1955) கட்டுப்பாடு விதிகளை சர்க்கார் விதிப்பதற்கு அதிகாரம் கொடுக்கும் இத் தாற்காலிகச் சட்டமானது 25—1—1955-உடன் அமுல் இழந்துவிடுவதாக இருந்தது. இப்போது இச் சட்டம் 25—I—1956 வரை அமுலில் இருக்கும்படி நீடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எந்த எந்தப் பண்டங்களுக்கு 'கண்ட்ரோல்' அல்லது கட்டுப்பாடு ஏற்படுத்தலாம் என்று அச் சட்டத்தில் ஏற்கனவே ஒரு ஜாப்தா இருந்தது. இப்போது அந்த ஜாப்தாவுக்குப் பதிலாக புதிய ஜாப்தா கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் 'மின்சார விசை' ஒன்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது இனி மின்சார விசை சம்பந்தமாகத்தான் சர்க்காரால் கண்ட்ரோல் விதிகள் இயற்ற முடியும்.



# வழக்கும் தீர்ப்பும்

[இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி, சட்ட விளக்கம் செய்யப்படும்.]

## லைசென்சு கேட்கும் மனுவை 30 நாட்கள் கழித்து முனிசிபாலிடியார் நிராகரித்தனர். லைசென்சு கொடுக்கப்பட்டதாகவே சட்டம் பாவிக்கும்.

[ஆதாரம்:—67 லா வீக்லி 1113.]

முனிசிபாலிடிச் சட்டத்தில் ஒரு ஷரத்து இருக்கின்றது. அதாவது, எந்த எந்தக் காரியங்களுக்காகவோ, எந்த எந்தத் தொழில்களை நடத்துவதற்காகவோ முதலில் முனிசிபாலிடியாரிடம் லைசென்சோ அல்லது அனுமதியோ பெற்றுக் கொண்டுதான் நடத்த வேண்டுமென்று இருக்கிறது. அவ் விஷயங்களைப் பொருத்துத் தமக்கு லைசென்சோ அனுமதியோ வேண்டுமென்று கேட்டு ஒருவர் முனிசிபாலிடிக்கு மனுப் போட்டால், அம்மனுவானது முனிசிபாலிடியின் நிர்வாக அதிகாரிக்குக் கிடைத்த தேதியிலிருந்து 30 நாட்களுக்குள், அதன் பேரில் ஏற்படும் உத்தரவு என்ன என்று மனுதாருக்கு அறிவிக்கப்படாவிட்டால், மனுவில் கேட்டிருக்கும் கெடுவுக்கு லைசென்சோ அனுமதியோ கொடுக்கப்பட்டு விட்டதாக பாவிக்கப்படும் என்று முனிசிபாலிடிச் சட்டம் செக்ஷன் 321 (11)ல் இருக்கின்றது.

பிரஸ்தாப வழக்கில்—மதுரையில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் 17-11-1947 முதல் 31-3-1948 முடிய ஒரு கசாய்க்கடை நடத்தத் தமக்கு லைசென்சு கொடுக்கப்படவேண்டுமென்று ஒருவர் மதுரை முனிசிபாலிடிக்கு மனுப்போட்டார். மனுவின் பேரில் 30 நாட்களுக்குள் மனுதாருக்கு யாதொரு உத்தரவும் அறிவிக்கப்படவில்லை. மனுதார் மனுவில் கண்ட வியாபாரத்தை ஆரம்பித்து நடத்தி வந்தார். 30 நாட்களுக்குப் பிறகு 26-3-1948ல்தான் அவருடைய மனுவை முனிசிபாலிடியார் நிராகரித்து விட்டதாக அவருக்கு அறிவிக்கப்பட்டது. அந்த இடத்தில் கசாய்க் கடை வைத்து நடத்துவது பொதுமக்களின் சுகாதாரத்திற்கு ஏற்றதல்ல என்று உத்தரவில் காரணமும் கண்டிருந்தது. பிறகு லைசென்சு மனு நிராகரிக்கப்பட்டிருந்தாலும், சட்டத்தில் கண்ட 30 நாட்களுக்குள் முனிசிபாலிடியார் தங்களுடைய உத்தரவை மனுதாருக்குத் தெரிவிக்கத் தவறியதால், மனுவில் கண்ட கெடுவில் மனுதார் தொழில் நடத்துவது குற்றமாகாதென்றும் அப்படி நடத்தியதற்காக மனுதார்மீது முனிசிபாலிடியார் கிரிமினல் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள முடியாதென்றும் உயர்நீதிபதி கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் இவ்வழக்கில் தீர்ப்பளித்தனர்.

## தம்மிடம் வேலை செய்யும் ஒரு சிப்பந்தியை இஷ்டப்படி நீக்கி விடும் உரிமை, முதலாளிக்குக் கிடையாதா? தொழில் தகராறு சட்டத்தில் ஏற்பட்ட வழக்கில் ஹைகோர்ட்டின் தீர்ப்பு

[ஆதாரம்:—68 லா வீக்லி—58]

சென்னை ஈஸ்ட் இந்தியா கம்பெனி லிமிடெட் என்ற கம்பெனியாரிடம் கோபால் என்ற ஒருவர் 'டைம் கீப்பர்' என்ற பதவியில் வேலை செய்து வந்தார். 6-3-1951ல் கம்பெனியார் இவரை 'ஸ்டோர் டிபார்ட்மெண்ட்' என்ற வேறு ஒரு இலாகாவுக்கு மாற்றினர்.

தாம் முன் வகித்து வந்த பதவியிலிருந்து தம்மை ஒரு கீழ்ப் பதவிக்கு இறக்கிவிட்டதாகவும் இதை ஒரு தண்டனையாகவும் கோபால்

கருதினர். அப்படிச் செய்ய என்ன காரணம் என்று அவர் கம்பெனியாரைக் கேட்டார். இவ்விதம் செய்தது, அவரை அவர் வகித்து வந்த பதவியிலிருந்து கீழ்ப்படிக்கு இறக்கியதாகாதெனக் கம்பெனியார் அவருக்குத் தெரிவித்து விட்டு, புதிய வேலையைக் கோபால் செய்ய மறுத்து விட்டதாகக் கம்பெனியார் அவரை, 14-3-1951-ல் வேலையை விட்டு நீக்கிவிட்டனர்.

கோபாலை நீக்கியது தவறு என்று அக் கம்பெனியின் தொழிலாளர் சங்கம் கருதியது. அச் சங்கத்திற்குக் கோபால் தான் காரியதரிசி, அதனால் தான் கம்பெனியார் அவரைத் தள்ளி விட்டனர் என்று அச் சங்கம் புகார் செய்தது. இது ஒரு தொழில் தகராறு. ஆகையால் தொழில் தகராறு சட்டப்படி (Industrial Disputes Act) இத் தகராறைத் தீர்க்கும்படி சர்க்கார் இவ் வழக்கைச் சென்னைத் தொழில் 'டிரிபுனல்' கோர்ட்டுக்கு அனுப்பினர். தொழில் கோர்ட் இதை விசாரணை செய்தனர். கம்பெனியார் கோபாலை வேலையை விட்டு நீக்க, யாதொரு நியாயமான காரணமோ, போதுமான காரணமோ இல்லை எனவும், அவரைத் தள்ளிய முறையும் சட்டப்படிக்கான முறை அல்ல எனவும், அவரைக் கம்பெனியார் மறுபடியும் தங்களிடம் அவர் 14-3-1951-ல் எந்தப் பதவியிலிருந்தாரோ அதே பதவியில் அமர்த்திக் கொள்ளவேண்டுமென்றும், அவரை வேலையை விட்டு நீக்கிய தேதி முதல் மறுபடி வேலைக்கு அமர்த்திக் கொள்ளப்படும் வரையில் கம்பெனியார் அவருக்கு சம்பளப் பாக்கியையும் கொடுத்து விட வேண்டுமென்றும் தொழில் கோர்ட்டார் 'அவார்ட்' அதாவது மத்தியஸ்தத் தீர்ப்பளித்தனர். தொழில் தகராறு சட்டப்படி சர்க்கார் இத் தீர்ப்பை சர்க்கார் கெஜட்டிலும் பிரசுரித்தனர்.

அதன் பிறகு கம்பெனியார் சென்னை ஹைகோர்ட்டில் ஒரு 'ரிட்' மனுக் கொடுத்தனர். அதாவது இவ்விதம் தீர்ப்பளிக்கத் தொழில் தகராறு கோர்ட்டுக்கு அதிகாரமில்லை என்றும், அக் கோர்ட்டார் செய்த மத்தியஸ்தத் தீர்ப்பை ரத்துச் செய்ய வேண்டுமென்றும் அதில் கோரி இருந்தனர்.

வேலையை விட்டு நீக்கப்பட்ட ஒரு சிப்பந்தியை மறுபடியும் வேலைக்கு வைத்துக் கொள்ள வேண்டுமென்று உத்தரவு செய்யத் தொழில் கோர்ட்டுக்கு அதிகாரமில்லை என்றும், அப்படியே சட்டப்படி தொழில் கோர்ட்டுக்கு அவ்வித அதிகாரம் இருந்தாலும், அவ்வித அதிகாரமானது நமது அரசியல் அமைப்புச் சட்டத்தினால் இந்தியப் பிரஜைகளுக்கு அளிக்கப் பட்டிருக்கும் தொழில் சுதந்தரம் என்ற ஜீவாதார உரிமைக்கு முரணாக இருப்பதால் அவ்வித அதிகாரம் கொடுக்கும் சட்டமே செல்லாதெனவும், கம்பெனியார் இரண்டு கட்சிகளை வற்புறுத்தினர்.

இவ்விரண்டு கட்சிகளையும் உயர் நீதிபதிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. நீக்கப்பட்ட தொழிலாளரை முதலாளியானவர் மறுபடியும் வேலைக்கு அமர்த்திக்கொள்ள வேண்டுமென்று உத்தரவிட தொழில் தகராறு சட்டப்படி தொழில் டிரிபுனல் கோர்ட்டுகளுக்கு அதிகாரம் உண்டென்று உயர் நீதிபதிகள் அபிப்பிராயப் பட்டனர். இதற்கு முன் அளிக்கப்பட்ட சில தீர்ப்புகளிலும் நீதிபதிகள் இதே விதமாக அபிப்பிராயப்பட்டிருப்பதே இவ்வழக்கிலும் பின்பற்றப்பட்டது. தொழில் தகராறு சட்டப்படி தொழில் டிரிபுனல்களுக்கு அவ்வித அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதானது இந்தியப் பிரஜைகளின் ஒரு 'ஜீவாதார உரிமையை பாதிக்கவில்லை என்றும் உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர்.

நமது அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஆர்டிகிள் 19 (1) (g) என்ற ஷரத்தின்படி "இந்தியப் பிரஜைகள் யாவரும்......எந்தத் தொழிலையும் மேற்கொள்ளவும், எந்த அலுவலையும், வியாபாரத்தையும் வேலையையும் நடத்தவும் உரிமை உடையவர் ஆவார்"—என்று இருக்கிறது. ஆனால் அதே ஷரத்தில் இவ்வுரிமை சம்பந்தமாக ஒரு விதிவிலக்கும் அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆர்டிகிள் 19 (6) என்ற அந்த விதி விலக்கின்படி "பொது ஜனங்களின் நலத்திற்காக நியாயமான கட்டுப்பாடுகளை ஏற்படுத்த" அரசாங்கத்திற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

நீக்கப்பட்ட ஒரு சிப்பந்தியை மறுபடியும் முதலாளியானவர் வேலைக்கு அமர்த்திக் கொள்ள வேண்டுமென்று உத்தரவிடுவது ஒரு தனி நபரின் தொழில் சுதந்தரத்தைப் பாதிக்கும் உத்தரவு அல்ல என்று உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர். அப்படி இவ்வித உத்தரவுகள் மக்களுடைய ஜீவாதார உரிமையான தொழில் சுதந்தரத்தைப் பாதிப்பதாக இருந்தாலும், இவ்விதம் செய்வது பொது மக்களின் நன்மைக்கான ஒரு நியாயமான ஏற்பாடாக இருப்பதால், அரசியல் அமைப்புச்

தொடர்ச்சி - பக்கம் 22 பார்க்கவும்.)

# கூட்டுறவுச் சட்டமும் விதிகளும்.

K. ஸ்ரீநிவாஸன், M. A.
(தஞ்சை ஹூட் கூட்டுறவுப் பயிற்சிக் கழக விரிவுரையாளர்.)

[1932ஆம் வருடத்திய கூட்டுறவுச் சட்டமும் அவை சம்பந்தமான விதிகளும் "வக்கீல்" 1954 மே இதழ் முதல் தொடர்ச்சியாக விளக்கம் செய்யப்படுகின்றன.]

## சங்கம் தன்னிடமுள்ள தீர்ப்புகளை செக்ஷன் 57 A படி நிறைவேற்ற மனு.

ஒரு சங்கம் தன்னிடமுள்ள தீர்ப்புகளை (டிக்ரி, அவார்ட் எதவானலும்) நிறைவேற்ற ஜில்லா கூட்டுறவு ரிஜிஸ்திராரிடம் செக்ஷன் 57A ரூல் XXII படி மனுக்கொடுக்க வேண்டும்.

மனு, அதற்கென்று ஏற்பட்ட (ஷெட்யூல் 3) நமூனுவில் எழுதப்பட்டிருக்கவேண்டும். வாதி பிரதிவாதிகளின் பெயர், விலாசம் சரியாக எழுதப்பட்டு, சேரவேண்டிய தொகை சரியாகக் குறிக்கப்படவேண்டும். ஜங்கம சொத்து, ஸ்தாவர சொத்து இவைகளில் எவைமீது நடவடிக்கை தேவை என்பது மனுவில் குறிக்கப்பட வேண்டும். டிக்ரி நகல் நிறைவேற்றக்கோரும் தீர்மானத்துடன் சேர்த்து ஜில்லா (கூட்டுறவு) ரிஜிஸ்திராருக்கு அனுப்பப்படவேண்டும்.

ரிஜிஸ்திரார் மனுவைப் பரிசிலனை செய்தபின் நிறைவேற்று கட்டணத்தைத் தெரிவிப்பார். கட்டணத்தைச் சங்கம் தவக்கமின்றி, கஜானுவில் கட்டி, தகவலை ரிஜிஸ்திராருக்கு எழுத வேண்டும். பின்பு அவர் மனுவை நெம்பரிட்டு (E. P. No.) நிறைவேற்றிவைக்கும்படி சேல்-ஆபீசருக்கு அனுப்பி வைப்பார். ஜாமீன் டிக்ரி விஷயத்தில் முதலில் ஜங்கம சொத்து ஏலமும், பின்பு ஸ்தாவர சொத்து ஏலமும் அனுமதிக்கப் படும். அடமான டிக்ரி விஷயத்தில் நேரடியாக அடமான சொத்து ஏலத்திற்குக் கொண்டுவரப் படும்.

தற்சமயம் ஜாமீன் டிக்ரியில் ஜங்கம சொத்து ஏலம் நிறைவேற்ற ரூ. 8—0—0ம், ஸ்தாவர சொத்து ஏலம் நிறைவேற்ற ரூ. 10—8—0ம், செலவு ஏற்படுகிறது. ஒவ்வொரு அதிகப் பிரதிவாதிக்கும் ரூ. 1-8-0 வரை அதிகச் செலவு ஏற்படும்.

## ஜங்கமசொத்துக்கள்மீது ஜப்தி எப்படி செய்யப்படும்?

நிறைவேற்று மனு வரப்பெற்றதும் ரிஜிஸ்திரார் டிக்ரி பாக்கிதாருக்கு டிக்ரிதொகையை உடனே செலுத்தி விடும்படியும், தவறினல் மேல் நடவடிக்கை செய்யப்படும் என்றும் டிமாண்ட்-நோட்டீஸ் (நெ. 2) சேல்-ஆபீசர் மூலம் அனுப்புவார்.

மேற்படி நோட்டீஸ்படி தொகை உடனே செலுத்தப்படாவிட்டால் சேல்-ஆபீசர் பாக்கிதாரின் ஜங்கம சொத்துக்களை ஜப்தி(Distrant) செய்வார்.

ஜப்தி எப்பொழுதும் பகல்நேரத்தில் சாத்தியமானவரை வாதியைப் (சொஸைடியை) பக்கத்தில் வைத்துக்கொண்டே செய்யப்படும். பாக்கிதார் வீட்டு முன்கதவு பூட்டப் பட்டிருந்தால் அது போலீஸ் உதவியுடன்தான் திறக்கப்பட வேண்டும். மற்றபடி சாமான்கள் உள்ள அறையின் கதவுகளை, சேல்-ஆபீசர் தகுந்த சாட்சிகள் முன்னிலையில் தாமே திறந்து உட்பிரவேசிக்கலாம்.

ஜப்தியில் டிக்ரி பாக்கிதாருக்குச் சொந்தமான பாத்திரம், வண்டி, மரச்சாமான்கள், நகைகள், ஆடு, பசு, தானியம் முதலியவைகளையும், மற்றும் அவருக்குச் சொந்தமான புரோநோட்டு, டிக்ரிகள் காணப்பட்டால் அவைகளையும் வசம் செய்யலாம்.

## எந்தெந்தச் சொத்துக்களை டிக்ரி பாக்கிக்காக ஜப்தி செய்யக் கூடாது?

டிக்ரி பாக்கிதாருக்குச் சொந்தமானதும் C. P. C. செக்ஷன் 60 படி விலக்கப்பட்டதுமான கீழ்க்கண்ட சாமான்களை ஜப்தி செய்யக் கூடாது.

1. பாக்கிதாரின் குறைந்தபக்ஷ வசதிக்கு அவசியமான உடை, படுக்கை, சமையல் பாத்திரங்கள்.

2. தொழிலாளியின் ஆயுதங்கள், உழவனின் கலப்பை, ஏர் சாமான்கள், உழவு மாடு, மண் வெட்டி முதலியன.

(தொடரும்)

# கேள்வியும் பதிலும்



இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் தமிழில் சுருக்கமாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு கேள்வியும் தனித்தனியான காகிதத்தில், பதில் எழுத இடம் விட்டு எழுதி அனுப்பவேண்டும். தவிர ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும். ஒவ்வொரு கேள்வியிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களுக்கு மட்டில்தான், அதன் 'பதில்' பொருந்தும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே. கேள்விகளுக்கு நேரில் பதில் அனுப்புவதும் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளுவதும் இயலாது.

## இந்துச் சட்டப்படி விதவை சுவீகாரம் செல்லுமா?

9, கேள்வி: (சத்தியமூர்த்தி) இந்துச் சட்டத்தின்படி விதவை சுவீகாரம் செல்லுமா? அது எந்த வருடத்திலிருந்த?

பதில்: தென் இந்தியா சம்பந்தப்பட்ட வரையில் விதவை சுவீகாரம் செல்லும். ஆனால் கணவன் இருக்கும்போது அவர் தம்முடைய ஆயுளுக்குப்பின் தம்முடைய மனைவியானவள் சுவீகாரம் செய்து கொள்ளுவதற்கு அவளுக்கு அனுமதி கொடுத்திருக்க வேண்டும்; அப்படி அனுமதியில்லாவிட்டாலும், கணவன் இறந்த பிறகு கணவனுடைய 'சபிண்டர்கள்' அல்லது 'தாயாதிகள்' என்று சொல்லப்படும் பங்காளிகளுடைய சம்மதத்தைப் பெற்றும் விதவை சுவீகாரம்செய்து கொள்ளலாம். ஆனால் கணவன் தம்முடைய மனைவி சுவீகாரம் செய்துகொள்ளுவதைத் தடைசெய்திருந்தால், அவள் சுவீகாரம் செய்துகொள்ளவே முடியாது. தென் இந்தியாவில் இது விசேஷமாய்ப் பின்பற்றப்படும் இந்தச் சட்டம் இததான் என்று பெரும்படியாகச் சொல்லலாம். இது விஷயமாகச் சட்ட சபைகளால் இயற்றப்பட்ட சட்டம் ஒன்றுமில்லை. இந்தச் சட்டம் என்ன என்று பல வழக்குகளில் உயர்நீதி மன்றங்களால் விளக்கப்பட்டு உருவாகி இருக்கும் இந்துச் சட்ட விதிகளில் இதுவும் ஒன்று. ஆகையால் விதவை சுவீகாரம் என்பது ஆதிமுதல் அனுஷ்டானத்திலிருக்கும் இந்தச் சட்டம் என்றுதான் சொல்லவேண்டும்.

## இரவில் வண்டியில் விளக்கு இல்லாமல் போகலாமா?

10. கேள்வி: (ஜமால் முகமது — முதுகளத்தூர்) நிறைய வைக்கோல் ஏற்றிப் போகும் மாட்டு வண்டியில் இரவில் போகும்போது 'லைட்' இல்லாமல் போனால் போலீசார் 'சார்ஜ்' செய்யலாமா? அதற்குக் கோர்ட்டில் அபராதம் விதிக்கலாமா?

பதில்: சென்னை போக்குவரத்துக் கட்டுப்பாடுச் சட்ட விதிகளின்படி (Madras Road Traffic Rules) சூரியன் மறைந்த அரைமணி நேரத்திற்குப் பிறகு, சூரியன் உதிப்பதற்கு அரைமணி முன் வரையில், இரவில் பொது ரஸ்தாக்களில் போகும் எவ்வித சாமான்களை ஏற்றிச் செல்லும் வண்டியிலும் விளக்கு ஒன்று இருக்கவேண்டும். இவ்விளக்கு, முன்னிருந்தும் பின்பக்கத்திலிருந்தும் வெளிச்சம் தெரியும்படி இருத்தல் வேண்டும். விளக்கு வெள்ளை வெளிச்சத்துடன் இருக்கவேண்டும்; அதாவது சிகப்பு, பச்சை முதலிய கலர் லைட் கூடாது. (விதி 43) அப்படி விளக்கு இல்லாமல் வண்டி ஓட்டுவது இச்சட்டப்படி ஒரு குற்றமாகும். இக்குற்றத்திற்கு ரூ. 50 வரையில் அபராதம் விதிக்கலாம். (விதி 53.)

187737

## இந்துவால் கொடுக்கப்படும் சொத்துக்கள் 'வக்பு' ஆகுமா?

**11. கேள்வி:** (இனயத்துல்லா திருவாரூர்.) மசூதிகளுக்கும் தர்க்காக்கள், தைக்கால்கள் என்னும் முஸ்லீம் மஹான்களின் சமாதி நிலயங்களுக்கும், தீப தூபங்கள் செய்வதற்காகத் தஞ்சை மகாராஜாவால் மானியம் விடப்பட்டிருப்பதை முஸ்லீம் வக்ப் போர்டில் பதிவு செய்யாவிட்டால் குற்றமாகுமா?

**பதில்:** முஸ்லீம் வக்புச் சட்டம் (The Muslim Wakfs Act 1954) என்ற 1954—ஆம் வருடத்திய 29-வது மத்தியச் சட்டத்தில் 'வக்ப்' (Wakf) என்பதற்கு அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது இஸ்லாமியச் சட்டத்தால் புனிதமான தென்றோ, மத சம்பந்தமான தென்றோ, அல்லது தருமசம்பந்தமான தென்றோ, கருதப்படும் காரியங்களுக்காக ஸ்தாவர சொத்துக்களையோ அல்லது ஜங்கம சொத்துக்களையோ ஒரு முஸ்லீமானவர் நிரந்தரமாக அர்ப்பணம் செய்வதற்கு 'வக்பு' என்று பெயர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் சொத்துக்களைக் கொடுப்பவர் முஸ்லீமாக இருந்தால் தான் அது 'வக்பு' ஆகும். ஆனால் நீண்ட காலமாக 'வக்பு' எனக் கருதப்பட்டிருக்கும் சொத்துக்களும் 'வக்பு' ஆகும் என்று ஒரு ஷரத்தும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்து மகாராஜாவால் கொடுக்கப்பட்டிருக்கும் சொத்து 'வக்பு' ஆகாது. இருந்தாலும் நீண்டகாலமாக குறிப்பிட்ட அச் சொத்துக்கள் 'வக்ப்' என்று கருதப்பட்டு வந்திருந்திருந்தால், அச் சொத்துக்களும் இச்சட்டப்படி 'வக்ப்' ஆகும். இச்சட்டம் அமுலுக்கு வந்த மூன்று மாதத்திற்குள் 'வக்பு'களை வக்பு போர்டில் பதிவு செய்து கொள்ள வேண்டும். (செக்ஷன் 25.) பதிவு செய்து கொள்ளாமலிருப்பது குற்றமாகும். (செக்ஷன் 41) 1954-ஆம் வருடத்திய முஸ்லீம் வக்புச் சட்டம் "வக்கீல்" 1954 ஜூலை இதழில் விளக்கப்பட்டிருக்கிறது.

## 'வரிக்குவரி' - விற்பனை வரிச் சட்டத் திருத்தமும் ஹைகோர்ட்டுத் தீர்ப்பும்

**12. கேள்வி:** (ராமசுப்பய்யர்-திருநெல்வேலி). சென்னைச் சர்க்காரால் நிறைவேற்றப்பட்ட சென்னைப் பொது விற்பனை வரி (மொத்த வியாபாரத் தொகை என்பதற்கு அர்த்தம் சொல்வதற்கும் வரி விதிப்புக்களைச் செல்லுபடியாக்குவதற்குமான) சட்டம் 1954 ஆம் வருடத்திய 17 வது சட்டம் செல்லத்தக்கதில்லை என்று ஹைகோர்ட்டார் தீர்ப்புக் கூறி இருக்கிறார்களா?

**பதில்:** இன்னும் கூறவில்லை. ஏற்கனவே இருந்த விற்பனை வரிச் சட்டப்படி 'வரிக்கு வரி' வாங்குவது செல்லாதென, சென்னை ஹைகோர்ட்டார் ஒரு தீர்ப்பு அளித்தனர். அதாவது ஒரு வியாபாரியால் சரக்கு வாங்குபவர்களிடம் வசூல் செய்யும் விற்பனை வரித் தொகையை அவருடைய 'மொத்த வியாபாரத் தொகை'யில் சேர்த்துக் கொள்ளச் சட்டம் இடங் கொடுக்கவில்லை என்றும் அப்படிச் சேர்த்துக்கொண்டு சர்க்காரால் வரிக்கு வரி வசூல் செய்திருப்பது சட்ட விரோதமானது எனவும் தீர்ப்புக் கூறினர். இத்தீர்ப்புக்குப் பிறகு, அதாவது இத்தீர்ப்பினால் சர்க்காருக்கு ஏற்படக்கூடிய சங்கடமான நிலைமையைச் சமாளிப்பதற்காகச் சென்னைச் சர்க்கார் ஒரு திருத்தச் சட்டம் கொண்டு வந்திருக்கின்றனர். இதுதான் 1954ஆம் வருடத்திய 17-ஆவது சென்னைச் சட்டம். அத்திருத்தச் சட்டத்தில் 'மொத்த வியாபாரத் தொகை' என்பதில், வியாபாரியால் வசூல் செய்யப்பட்டிருக்கும் விற்பனை வரித் தொகைகளும் சேர்ந்ததே என்றும் ஆதிமுதல் அப்படியே அர்த்தம் செய்து கொள்ளவேண்டுமென்றும், ஆனால் 1-4-1954க்குப் பிறகு வியாபாரிகளால் வசூல் செய்யப்படும் விற்பனை வரித் தொகைகளை அவர்களுடைய 'மொத்த வியாபாரத் தொகை'யில் சேர்த்துக் கொள்ளவேண்டியதில்லை என்றும் விற்பனை வரிச் சட்டத்தை இப்போது திருத்தி இருக்கின்றனர். இத்திருத்தச் சட்டமே செல்லுமா செல்லாதா என்பதைப்பற்றி இது வரையில் ஹைகோர்ட்டார் யாதொரு தீர்ப்பும் அளிக்கவில்லை. இத்திருத்தச் சட்டம் செல்லுபடியானதென்று வைத்துக் கொண்டால், 1-4-1954க்கு முன் 'வரிக்கு வரி' வசூல் செய்ய, சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது.

## முஸ்லீம் தாயாரின் பூர்வீகச் சொத்து

**13. கேள்வி:** (சந்தா நெ. 970 - பாளையங் கோட்டை.) ஒரு முஸ்லீம் தாயாரின் பூர்வீகச் சொத்தில் ஆண் மகனுக்கு எவ்வளவு பாகம் கட்டுப்படும்; பெண்மகளுக்கு எவ்வளவு பாகம் கட்டுப்படும்? அதேபோல் தகப்பனார் சொத்தில் ஆணுக்கு எவ்வளவு? பெண்ணுக்கு எவ்வளவு?

**பதில்:** இஸ்லாமியச் சட்டப்படி, இறந்தவருடைய சொத்துக்கள் அவருடைய பூர்வீகச் சொத்தா, அல்லது சுயசம்பாத்தியச் சொத்தா என்றோ, இறந்தவர் ஆணா, பெண்ணா என்றோ, கவனிக்கவேண்டியதில்லை. தகப்பனார் இறந்தாலும், தாயார் இறந்தாலும் இறந்தவருடைய சொத்தில் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒரு பாகமும் ஒவ்வொரு ஆண் மகனுக்கும் இரண்டு பாக

மர்கவும் கணக்குச் செய்து அந்த வீதாசாரப்படி பாகம் செய்துகொள்ள வேண்டும்.

## ஷாப் சட்டம். ஞாயிற்றுக்கிழமையில் வியாபாரம் செய்யாமல் கடையைத் திறந்து 'பேபர்' படித்துக்கொண்டிருக்கலாமா?

14. கேள்வி: (அப்துல்காதர்—தூத்துக்குடி.) ஞாயிற்றுக்கிழமை விடுமுறையன்று, கடைச் சிப்பந்திகள் ஒருவரும் கடைக்கு வராமலிருக்க, கடையின் சொந்தக்காரர் கடையைத் திறந்து வியாபாரம் ஒன்றும் செய்யாமல், பேபர் புஸ்தகம் முதலானவைகள் படித்துக்கொண்டு நேரத்தைப் போக்கலாமா? ஷாப் இன்ஸ்பெக்டர் கடையை ஞாயிற்றுக்கிழமையன்று திறக்கவே கூடாதென்று சொல்லுகிறார்.

பதில்: ஷாப்புச் சட்டத்தின் செக்ஷன் 11-ன்படி வாரத்தில் ஒரு நாள் சட்டாயமாகக் கடையை மூடவேண்டும். ஆனால் 'மூடுவது' (Closed) என்றால் வியாபாரம் செய்யாமலும், வியாபார சம்பந்தமான அலுவல்களைச் செய்யாமலும் இருப்பதுதான் என்று ஷாப்புச் சட்டத்திலேயே அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது (செக்ஷன் 2 (2):— "closed" means not open for the service of any customer or open to any business connected with the establishment.) ஆகையால் உண்மையில் கடையின் சொந்தக்காரர் கடையின் கதவுகளைத் திறந்து வைத்துக்கொண்டு பேப்பரோ, புத்தகமோ படிப்பது ஷாப் சட்டத்திற்கு முரணானது அல்ல. மேலும் முதலாளியை நீக்கி மூன்று அல்லது குறைவான சிப்பந்திகள் மட்டில் இருக்கும் கடைகளுக்கு 8-12-1954 முதல் 8-12-1955 வரையில் ஒரு வருடத்திற்கு ஷாப் சட்டமே கிடையாதென்று விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும் கடைகள் வார விடுமுறை விடவேண்டிய சட்டாயமில்லை. 1954 "வக்கீல்" இதழ் 11-பக்கம் 22 பார்க்கவும்.

## ஒரே நிலத்திற்கு இரண்டு வரிகள்.

15. கேள்வி: (ஷேக்காலி சாகிப் - கொரடாச்சேரி.) ஒரு நிலத்தின் பேரில் ரிவின்யூ வரியும், முனிசிபல் வரியும் விதித்து வாங்கலாமா? அப்படி இரண்டும் விதித்து வாங்கினால், எதைத் தவிர்ப்பது; யாருக்கு எழுதுவது?

பதில்: இரண்டும் வாங்கலாம். ஒன்றையும் தவிர்க்க முடியாது. லாண்டு ரிவின்யூ என்பது சர்க்காரைச் சேர்ந்தது. முனிசிபல் வரி முனிசிபாலிடியைச் சேர்ந்தது. விவசாயத்திற்காக மட்டில் உபயோகப்படுத்தப்படும் நிலங்களின் மீது விதிக்கப்படும் முனிசிபல் வரியை, அந்நிலங்கள் குத்தகைதாருடைய அனுபோகத்தில் இருந்தால், குத்தகைதாரிடமிருந்து பாதி வரியையும் நிலத்தின் சொந்தக்காரரிடமிருந்து பாதி வரியையும் விதித்து வாங்கவேண்டுமென்று இருக்கிறது. (முனிசிபாலிடிச் சட்டம்-செக்ஷன் 81 (4) b.)

## பாகம் செய்துகொண்ட இந்துச் சகோதரருக்கு வார்சு

16. கேள்வி: (கோ - மழவு - ஒரத்தநாடு) ஒரு இந்துக் குடும்பத்தில் இரு சகோதரர்கள். பாகம் ஆகி சுமார் 25 வருடங்கள் ஆகின்றது. மூத்தவர் இறந்துபோய் விட்டார். இறந்தவருக்கு மனைவியும், ஒரு மகளும் உண்டு. ஷை மனைவியின் பெயரில் பட்டா எல்லாம் ஏற்பட்டு 10 வருஷம் ஆகிறது. மகளுக்குத் திருமணம் ஆகிவிட்டது. ஆகையால், ஷையாரின் மனைவி தன் சொத்துக்களை தன் மகளுக்கு உயில் எழுதிக் கொடுக்கலாமா? அல்லது கிரயம் செய்து கொடுத்தால் செல்லுமா?

பதில்: இறந்த மூத்த சகோதரர் தம்முடைய பாகத்திற்குக் கிடைத்த சொத்துக்களை அவர் உயிருடனிருக்கும் போதே மனைவிக்குச் சர்வ சுதந்தரமாகக் கொடுத்திருந்தாலும் அல்லது தம்முடைய ஆயுளுக்குப் பின் அச்சொத்துக்களைத் தம்முடைய மனைவியே சர்வசுதந்தரத்துடன் அடையவேண்டுமென்று உயில் எழுதி வைத்திருந்தாலும், அச்சொத்துக்களை மனைவியானவள் கிரயம் முதலியது செய்யலாம்; தன் மகளுக்கும் கொடுக்கலாம். அப்படியில்லாமல் கணவன் இறந்த பிறகு வார்சு முறைமையில் அச்சொத்துக்களை மனைவி அடைந்திருந்தால் சாதாரணமாக அவள் ஆயுள் வரைதான் அச்சொத்துக்களை அனுபவிக்கலாம். மனைவியின் பெயரில் பட்டா எவ்வளவு வருடங்கள் இருந்தாலும், மனைவிக்குச் சாதாரணமாக அனுபோக பாத்தியம்தான் உண்டு. அச்சொத்துக்களை அவள் உயில் மூலம் கொடுக்க முடியாது. ஆனால் மனைவி இறந்த பிறகு அவளுடைய மகள்தான் அடுத்த வார்சு. மகளுக்கும் அனுபோக பாத்தியம்தான்.

# சென்னை விவசாயிகள் கடன் தவணைச் சட்டம் (1955)

[Madras Indebted Agriculturists (Repayment of Debts) Act 1955. சென்னைச் சட்ட மன்றத்தால் இயற்றப்பட்டிருக்கும் இச்சட்டம் 27-2-1955 தேதியில் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்று 1-3-1955 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் விசேஷ கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. 1-3-1955 முதல் இச்சட்டம் அமுலுக்கு வந்து விட்டது. ஏற்கனவே 28-2-1955 முடிய விவசாயிகள்மீது எவ்விதக் கோர்ட்டு நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளக் கூடாதென்று தடை செய்த விவசாயிகள் கடன் வாய்தாச் சட்டமானது 1-3-1955ல் அமுல் இழந்து விட்டது. 1-3-1955 முதல் அமுலுக்கு வந்திருக்கும் இப்புதிய சட்டத்திற்கும் பழைய சட்டத்திற்கும் பல முக்கிய விஷயங்களில் வித்தியாசங்கள் இருக்கின்றன. ஆகையால் இப்புதிய சட்டத்தால் அனுகூலமடையும் "விவசாயிகள்" யார் யார் என்பதையும், எந்த எந்த வகைக் கடன்களுக்கு எவ்வகையான சலுகைகள் காண்பிக்கப்படுகின்றதென்பதையும் நுட்பங்களுடன் தெரிந்து கொள்ளுவது அவசியமாகும்.

குறிப்பு:- 1955-ம் வருடத்திய இப்புதிய விவசாயிகள் கடன் தவணைச் சட்டத்தால் விவசாயிகள் கொடுக்கவேண்டிய கடன் தொகைகளில், அசலிலோ, வட்டியிலோ, எவ்விதத் தள்ளுபடியும் கிடையாது. விவசாயிகள் கொடுக்கவேண்டிய ஜாடா அசல் வட்டித் தொகைகளையும், அவர்கள் இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் தவணைகளில் கொடுத்துத் தீர்க்குமட்டில் அவர்களுக்கு இச்சட்டம் உதவுகின்றது. விவசாயிகள் கொடுக்கவேண்டிய கடன்களைப் பற்றியும் அசல் வட்டித் தள்ளுபடிகளைப் பற்றியும் ஏற்கனவே சட்டம் ஒன்று இருக்கிறது. அதுதான் 1938-ம் வருடத்திய "விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம்" ("விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் ஒத்திபற்றிய புதிய திருத்தம் உள்பட - விளக்கம்" என்ற "வக்கீல்" பிரசுரத்தைப் பார்க்கவும். இதன் விலை ரூ. 1—4—0.) இப்புதிய 1955-ம் வருடத்தியச் சட்டத்தின் அம்சங்கள் கீழே விளக்கப்பட்டிருக்கின்றன. இது வார்த்தைக்கு வார்த்தை மொழி பெயர்ப்பல்ல, சட்டத்தில் தோன்றக்கூடிய நுட்பமான சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ளுவதற்கு உதவியாக இச்சட்டம் முழுமையும் அப்படியே ஆங்கிலத்தில் உள்ளபடியேயும் இந்த இதழில் சேர்க்கப்பட்டிருக்கிறது.]

## முகவுரை

1955 ஆம் வருடத்திய 1-வது சென்னைச் சட்டமாகிய இச்சட்டத்தின் முழுப்பெயர் "சென்னைக் கடன்பட்ட விவசாயிகள், கடனைத் திருப்பிக் கொடுப்பதுபற்றிய 1955-ஆம் வருடத்திய சட்டம்" என்பது. இச்சட்டம் சென்னை ராஜ்யம் முழுவதிலும் அமுலில் இருக்கும். இச்சட்டம் 1-3-1955 முதல் அமுலுக்கு வரும். (செக்ஷன் 1.)

## இச்சட்டத்தில் "விவசாயி" என்பது யார்?

செக்ஷன் 2 (a)

விவசாய நிலங்களிலோ, தோட்டப்பயிர் நிலங்களிலோ ஏதாவது ஒரு பாத்தியம், அதாவது சாதாரண அடமான பாத்தியம் நீங்கலாக வேறு ஏதாவது பாத்தியமுள்ளவர்கள்தான் இச்சட்டப்படி "விவசாயி"களாவார்கள். ஆனால் அவ்விதம் பாத்தியமுள்ள நிலமானது குடியிருப்புக் கட்டிடத்தைச் சேர்ந்த நிலமாக இருக்கக்கூடாது. மேற்கண்டபடி நிலப்பாத்தியம் இருந்தாலும் கீழே கண்டவர்கள் "விவசாயிகள்" ஆக மாட்டார்கள். அவர்களாவார்:-

(1) 1952 - 53க்குப் பிறகு, எந்த வருடத்திலாவது ரூ. 150க்கு மேற்பட்டு நிலவரி கொடுக்கக் கடமைப்பட்டவர்கள். (நிலவரி என்பதில் பேஷ் குஷ்க்விட்ரெண்ட் இரண்டும் சேர்ந்ததே.) (2) 1952 - 53க்குப் பிறகு எந்த அரை வருடத்திலாவது ரூ. 900க்கு மேற்பட்ட வருமான முள்ளவரென்று இந்தியாவிலுள்ள முனிசிபாலிடி அல்லது வேறு ஸ்தலஸ்தாபனச் சட்டப்படி தொழில் வரி (Profession Tax) விதிக்கப்பட்டவர்கள். விவசாய வருமானம தவிர வேறு வகைத் தொழில் வருமானத்திற்கு விதிக்கப்பட்ட தொழில் வரியாக இருக்க வேண்டும். (3) 1952 - 53 வருடத்திற்குப் பிறகு எந்த அரை வருடத்திலாவது இந்தியாவிலுள்ள ஒரு முனிசிபாலிடி அல்லது ஸ்தலஸ்தாபனச் சட்டப்படி தாம் வசித்து வரும் கட்டடம் நீங்கலாகவும், விவசாய நிலங்கள் நீங்கலாகவும் மற்றக் கட்டடங்களுக்கும் நிலங்களுக்கும் ஒரு வருட வாடகை மதிப்பு ரூ. 600ன் பேரில் சொத்துவரி அல்லது வீட்டுவரி (Property or House Tax) விதிக்கப்பட்டவர்கள். (குறிப்பு:- இந்த இடத்தில் கெஜட்டில் இருக்கும் ஆங்கில வாசகத்தில் ஏதோ எழுத்துப்பிழை இருக்கிறது. இப்போதிருக்கும் வாசகப்படி சரியாக, வள்ளி

சாக, ரூ. 600 என்ற வருட வாடகை மதிப்பின் பேரில் சொத்துவரி அல்லது வீட்டுவரி விதிக்கப்பட்டவர்கள்தான் விவசாயிகள் அல்ல என்று ஏற்படும். "ரூ. 600 அல்லது அதற்கு மேற்பட்ட வருட வாடகை மதிப்பின் பேரில்" சொத்துவரி அல்லது வீட்டுவரி செலுத்திகிறவர்கள் விவசாயிகளல்ல, என்று வாசகம் திருத்தப்பட்டால்தான் பொருத்தம். இது சட்ட சபையின் பிழை என்றோ, அச்சுப்பிழை என்றோ தெரியவில்லை. (4) சென்னைப் பொது விற்பனைவரிச் சட்டப்படிக்கோ, அல்லது வேறு ராஜ்யங்களிலுள்ள விற்பனைவரிச் சட்டப்படிக்கோ — 1952 - 53 வருடத்திற்குப் பிறகு எந்த வருடத்திலாவது ரூ. 20,000க்குக் குறையாத மொத்த வியாபாரத்தின் பேரில் விற்பனைவரி விதிக்கப்பட்டவர்கள். (5) 1950 - 51க்குப் பிறகு எந்த வருடத்திலாவது, இந்திய வருமானவரிச் சட்டப்படி வருமானவரி (இன்கம் டாக்ஸ்) விதிக்கப்பட்டவர்கள். (6) இந்தியக் கூட்டு வியாபாரச் சட்டப்படி பதிவு செய்து கொள்ளப்பட்ட கூட்டு வியாபாரங்கள்; இந்தியக் கம்பெனிச் சட்டப்படி பதிவு செய்து கொள்ளப்பட்ட கம்பெனிகள்; அல்லது பிரிட்டிஷ் சட்டப்படிக்கோ, ஒரு விசேஷ இந்தியச் சட்டப்படிக்கோ பதிவு செய்து கொள்ளப்பட்டிருக்கும் சங்கங்கள்.

ஒருவருக்கு விவசாய நிலங்களிலோ, தோட்டப்பயிர் நிலங்களிலோ எவ்வித பாத்தியமிருந்த போதிலும் மேலேகண்ட 6 வகைகளுக்குள் வருபவர்கள் இச்சட்டப்படி "விவசாயிகள்" அல்ல.

## பிரிபடாத இந்துக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

ஒரு பிரிபடாத இந்துக் குடும்பமோ (அல்லது தரவாடு, தாவழி, குடும்பம், அல்லது கவரு இவைகளோ) விவசாயியாக இருந்தால், அக்குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொரு அங்கத்தினரும் இச்சட்டப்படி "விவசாயி" தான். ஆனால் அங்கபர் மேலேகண்ட 1 முதல் 5 வரையுள்ள வகைகளுக்குள் அகப்பட்டவராக இருந்தால் அவர் 'விவசாயி' அல்ல.

## மேலும் 1-10-53 தேதியிலும் "விவசாயி" யாக இருக்கவேண்டும்.

மேலேகண்ட ஷரத்துக்களின்படி ஒருவர் "விவசாயி"யாக இருந்தாலும் அவர் 1-10-1953 தேதியிலும் "விவசாயி" ஆக இல்லாவிட்டால் அவருக்கு இச்சட்ட ஷரத்துக்கள் பொருந்தமாட்டா. (உதாரணமாக 1-10-1953ல் யாதொரு நிலப் பாத்தியமும் இல்லாத ஒருவர் அத்தேதிக்குப் பிறகு நிலம் வாங்கி இருந்தால் அவருக்கு இச்சட்டத்தால் யாதொரு அனுகூலமுமில்லை. அவருக்கு இச்சட்ட ஷரத்துக்கள் பொருந்தமாட்டா.)

## "கடன்" என்பது எது?

செக்ஷன் 2 (b)

இச்சட்டத்தில் 'கடன்' என்பது ஒரு 'விவசாயி' யிடமிருந்து 1-10-1953 தேதியில் சேர வேண்டிய கடனைத் தான் குறிக்கும். அதாவது 1-10-1953க்குப் பிறகு ஏற்படும் புதிய கடன்களுக்கு இச்சட்டம் இல்லை. விவசாயி கொடுக்க வேண்டிய இக்கடனானது ரொக்கமாகக் கொடுக்க வேண்டியதாக இருந்தாலும் சரி; பண்டங்கள் அல்லது இனமாகக் கொடுக்கவேண்டியதாக இருந்தாலும் சரி; ஈட்டின் பேரில் கொடுக்க வேண்டியதாக இருந்தாலும் ஈடு ஒன்றுமில்லாமலே கொடுக்கப்படவேண்டியதாக இருந்தாலும் சரி, ஒப்பந்தப்படி கொடுக்க வேண்டியதாக இருந்தாலும், சிவில் அல்லது ரிவின்யூக் கோர்ட்டின் டிக்ரி அல்லது உத்தாவின் படி கொடுக்க வேண்டியதாக இருந்தாலும், வேறு வகையில் கொடுக்க வேண்டியதாக இருந்தாலும் சரி, அது "கடன்" தான். இருந்தாலும் கீழே கண்ட 6 வகை பொறுப்புக்களும் இச்சட்டப்படி "கடன்" அல்ல. அவையாவன:—(1) ராஜ்ய சர்க்காருக்கோ, மத்திய சர்க்காருக்கோ, ஒரு ஸ்தல ஸ்தாபனத்திற்கோ கொடுக்கப்படவேண்டிய தொகைகள். (2) நில அடமான பாங்கு உள்பட எந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டிய தொகைகள். (ஆனால் 1-10-1953 தேதிக்குப் பிறகு ஏற்பட்ட பாத்திய மாறுதல் மூலம் ஷெ கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தொகை சேரவேண்டியதாக இருக்கக் கூடாது.) (3) நம்பிக்கைத் துரோகம் செய்த காரணத்தினால் ஒருவர் கொடுக்க வேண்டிய தொகைகள். (4) ஜீவனாம்சம் சம்பந்தமான பொறுப்புக்கள். (5) வேலை செய்ததற்காகக் கொடுக்கப்பட வேண்டிய கூலி அல்லது சம்பளம். (6) கூட்டுச் சீட்டு (சிட்பண்டு) ஏற்பாட்டின் படி கொடுக்க வேண்டிய தொகைகள். மேலே கண்ட 6 வகைப் பொறுப்புகளும் இச்சட்டம் சம்பந்தப்பட்ட வரையில் 'கடன்' என்பதில் சேர்ந்தவை அல்ல. அதாவது மேலேகண்ட 6 வகைக் கடன்களைக் கொடுக்க வேண்டியவர்கள் 'விவசாயி' ஆக இருந்தாலும், அவர்களுக்கு இச்சட்டத்தால் யாதொரு அனுகூலமுமில்லை.

## 1-10-1953க்குப் பின் புதுப்பிக்கப் பட்ட கடன்கள்.

இச்சட்ட ஷரத்துக்கள் 1-10-1953 தேதியன்று விவசாயிகள் கொடுக்க வேண்டிய கடன்

களுக்குத் தான் பொருந்தும் என்று சொல்லப்பட்டது. ஆனால் கடன் கொடுக்க வேண்டியவரோ, அவருடைய வார்சுகளோ, அல்லது அவரிடமிருந்து பாத்தியம் கொண்டாடுபவர்களோ, அல்லது பாகம் செய்து கொண்ட காரணத்தினலோ, 1-10-1953 தேதிக்குப் பிறகு அக்கடனைப் புதுப்பித்துக் கொடுத்திருந்தாலும் சரி; அல்லது வேறு புதிய கடன் தஸ்தவேஜு எழுதி அதில் இதைச் சேர்த்திருந்தாலும் சரி; அவ்விதம் புதுப்பித்த தஸ்தாவேஜியானது கடன் கொடுத்தவருக்கே இருந்தாலும் சரி அல்லது அவருடைய வார்சுகள் பெயருக்கோ, அவரிடமிருந்து பாத்தியம் கொண்டாடுபவர்களுடைய பெயருக்கோ இருந்தாலும் சரி, அல்லது அவர்களுக்குள் பாகம் ஏற்பட்ட காரணத்தினல் இருந்தாலும் சரி; அதில் 1-10-1953 தேதியில் கொடுக்கப்பட வேண்டியதாக இருந்த கடன் தொகை எவ்வளவு அடங்கி இருக்கிறதோ அக்கடனுக்கு மட்டில் தான் இச்சட்ட ஷரத்துக்கள் பொருந்தும். (உதாரணமாக—1-10-1953க்கு முன்பு ஒரு விவசாயி ரூ. 1000 கடன் வாங்கி பிறகு 1954ல் அவர் அதே நபரிடம் இன்னும் ரூ. 1000 கடன் வாங்கிக் கொண்டு இரண்டு தொகைகளுக்கும் சேர்த்து 1954ல் ரூ. 2000க்கு அவர் ஒரு கடன் தஸ்தாவேஜு எழுதிக் கொடுத்திருந்தால்—இச்சட்டத்தில் கண்ட சலுகைகள் முதலியவை எல்லாம் 1-10-1953 தேதியில் அவர் கொடுக்க வேண்டிய கடன் ரூ. 1000க்கும் அதன் வட்டிக்கும் தான் பொருந்தும்.)

## 1-10-1953க்குப் பிறகு கடன் துண்டிக்கப்பட்டிருந்தால்

1-10-1953ல் ஒரு விவசாயி கொடுக்க வேண்டிய கடன் தொகையை அத்தேதிக்குப் பிறகு அவருடைய வார்சுகளோ அல்லது அவரிடம் பாத்தியம் கொண்டாடுபவர்களோ தங்களுக்குள் பிரித்துக் கொண்டு, கடன் கொடுத்தவருக்கு கடனின் ஒரு பாகத்திற்கு அவரவர் தனித்தனி தஸ்தாவேஜு எழுதிக் கொடுத்திருந்தாலும் சரி; அல்லது கடன் கொடுத்தவருடைய வார்சுகளுக்குள்ளோ, அவரிடமிருந்து பாத்தியம் கொண்டாடுபவர்களுக்குள்ளோ, அவ்விதக் கடனைப் பாகம் செய்து கொண்டு கடனின் ஒரு பாகத்திற்கு அவரவர் பெயருக்குத் தனித் தனித் தஸ்தாவேஜு வாங்கிக் கொண்டிருந்தாலும் சரி—அவ்விதம் துண்டாக்கப்பட்ட கடன்களுக்கும் இச்சட்டம் உண்டு.

## விவசாயி மீது தாவா செய்யவும் நிறைவேற்று மனுப் போடவும் தடை

இச்சட்டம் அமுலுக்கு வந்தது முதல் 4 மாதங்களுக்குள் (அதாவது 1-7-1955க்குள்)

செக்ஷன் 3 (1)

ஒரு விவசாயி மீது எந்த சிவில் அல்லது ரிவன்யூ கோர்ட்டிலும் கடன் வசூல் செய்யத் தாவாவோ, கடனைப் பொறுத்த டிக்ரியை நிறைவேற்ற மனுவோ போடக் கூடாது. விவசாயி ஒருவர் கொடுக்க வேண்டிய அவ்விதக் கடன் தொகையையோ, டிக்ரித் தொகையையோ, விவசாயி அல்லாத ஒருவரும் சேர்ந்து கொடுக்க வேண்டியவராக இருந்தால், மேற்கண்ட 4 மாத கெடுவுக்குள், விவசாயி மீதும் சரி, விவசாயி அல்லாதவர் மீதும் சரி எவர் பேரிலும் தாவா போடவும் கூடாது; டிக்ரியை நிறைவேற்ற மனுக் கொடுக்கவும் கூடாது. ஒரு தாவாவில் பிரதிவாதியிடமிருந்து கடன் தொகை கிடைக்கவும் வேறு விதமான பரிகாரங்களும் கேட்கப் பட்டிருந்தாலும் அது கடனை வசூல் செய்வதற்காகப் போடும் தாவாவாகவே பாவிக்கப்படும். கடன் சம்பந்தமாகப் பரிகாரம் அளிக்கும் டிக்ரியில் வேறு விதப் பரிகாரங்களும் சேர்த்து அளிக்கப்பட்டிருந்தாலும், அது கடனைப் பொறுத்த டிக்ரியாகவே பாவிக்கப்படும். ஆனால், நிலம் சுவாதீனமாக வேண்டுமென்று போடப்படும் தாவா ஒன்றில் நில வருமானமும் சேர்த்துக் கேட்கப்பட்டிருப்பதால் மட்டில் அது 'கடனை வசூல் செய்வதற்காக'ப் போடப்படும் தாவா என்று கருதப்படமாட்டாது. (அதாவது நில சுவாதீனத்திற்கும் அதன் வருமானத்திற்கும் சேர்த்து தாவா செய்ய யாதொரு தடையுமில்லை.) மேலும் ஒரு டிக்ரியில் கடன் சம்பந்தமான பரிகாரம் தவிர வேறு பரிகாரங்களும் அளிக்கப்பட்டிருந்தால், அவ் வேறு பரிகாரங்கள் சம்பந்தப்பட்ட வரையில் எவ்வித நடவடிக்கைகள் எடுக்கவும் தடை ஒன்றுமில்லை.

## தடை மீறி, கடன் கொடுத்தவர் தாவா செய்தால்.

மேலே விளக்கப்பட்டிருக்கும் செக்ஷன் 3 (1) ஷரத்துக்கு முரணாக, கடன் கொடுத்தவர் கடனை

செக்ஷன் 3 (2)

வசூல் செய்வதற்காக அதில் கண்ட 4 மாதக் கெடுவுக்குள் (அதாவது 1-7-1955க்குள்) தாவா செய்தால், அத்தாவாவில் கடன் தொகைக்கு டிக்ரி ஏற்படும்போது வாதியின் செலவை அவரே பொறுத்துக்கொள்ளும்படியும், மேலும் அத்தாவாவில் விவசாயியாக இருக்கும் பிரதிவாதிகளுக்கு வாதி செலவு தொகை கொடுக்கும்

படியும் டிக்ரி ஏற்படும். இச்சட்டப்படி விவசாயிகள் கொடுக்கவேண்டிய கடன் தொகைகளைச் சில தவணைகளாகக் கொடுக்கலாமென்று (கீழ் செக்ஷன் 4(1) ல்) குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவ்விதம் விவசாயிகள் கொடுக்க வேண்டிய தவணைத்தொகைகளை அவர்கள் கோர்ட்டில் கட்டிவிடவும் உரிமை இருக்கிறது. அவ்விதம் விவசாயி ஒருவர் கொடுக்கவேண்டிய தவணைத் தொகைகளை அவர் கொடுத்து விட்டபிறகோ, அல்லது கோர்ட்டில் கட்டிவிட்ட பிறகோ, அல்லது அவ்விதம் செய்ய இச்சட்டப்படி இன்னும் கெடு இருக்கும் போதேயோ, விவசாயியின் மீது தாவா தொடரப் பட்டாலும், அவ்வித தாவாக்களில் டிக்ரி ஏற்படும் போது, வாதியின் செலவை அவரே பொறுத்துக்கொள்ளும்படியும், விவசாயியாக இருக்கும் பிரதிவாதிகளுக்கும், வாதி செலவு தொகை கொடுக்கும்படிக்கும் டிக்ரி ஏற்படும்.

ஆனால் அவ்வித தாவாக்களில் விவசாயி அல்லாத பிரதிவாதிகள் சம்பந்தப்பட்ட வரையில், செலவு தொகை விஷயமாய் எவ்விதமான உத்தரவுகள் செய்யவும் கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு. (கடன் தொகையும் வட்டியும் சம்பந்தப் பட்டவரையில் எவ்விதம் டிக்ரி செய்யப்படும் என்ற விஷயம் கீழே விளக்கப் பட்டிருக்கிறது.)

## கடனைத் தவணைகளில் செலுத்துவது

இச்சட்டம் அமுலுக்கு வந்த தேதியிலிருந்து 4 மாத கெடுவுக்குள் ஒரு விவசாயி கொடுக்க வேண்டிய ஜாடா வட்டித் தொகை

செக்ஷன் 4(1) யையும் (அதாவது இச்சட்டம் அமுலுக்கு வந்த தேதியாகிய 1-3-1955 வரை உள்ள ஜாடா வட்டியும்) அசல் பாக்கியில் 8ல் 1 பாகத்தையும் செலுத்த உரிமை உண்டு. அல்லது மொத்த அசல்வட்டி கூடுதல் தொகையில் 4ல் 1 பாகத்தையாவது செலுத்தலாம். இவ்விரண்டில் எத்தொகை குறைவாக இருக்கிறதோ அத்தொகையை மேற்கண்ட 4 மாத கெடுவில் செலுத்த விவசாயிக்கு உரிமை உண்டு. பாக்கிக் கடன் தொகையை மூன்று சமமான வருடாந்தரத் தவணைகளில் கொடுக்கலாம். ஒவ்வொரு வருடத் தவணைத் தொகையையும் அதற்குள்ள வட்டித் தொகையும் ஒவ்வொரு வருடம் ஜூலை மாதம் முதல் தேதியிலோ அதற்குள்ளோ கொடுக்க விவசாயிக்கு உரிமை உண்டு.

அதாவது இச்சட்டத்தால் அனுகூலமடையும் விவசாயிகள் தாங்கள் கொடுக்கவேண்டிய கடன் தொகைகளை அடியில்கண்ட தவணைகளில் திருப்பிச் செலுத்த உரிமை உண்டு:-

1-7-1955 தேதியிலோ அத்தேதிக்குள்ளோ அசல் தொகையில் 8ல் 1 பாகமும் 1-3-1955 வரை உள்ள ஜாடா வட்டியும் அல்லது அசல் வட்டிக் கூடுதல் தொகையில் 4ல் 1 பாகம் இவை இரண்டில் எது குறைவாக இருக்கிறதோ அத்தொகையைக் கொடுத்தால் போதும். இந்தக் கெடுவுக்குள் செலுத்திய தொகைபோக பாக்கிக் கடன் தொகை அசலை 3 சமபாகமாகச் செய்து 1-7-1956 தேதியிலோ அதற்கு முன்போ ஒரு பாக அசலையும் அப்பாகத்திற்கு அத்தேதிவரை உள்ள வட்டியையும், 1-7-1957 தேதியிலோ அதற்குமுன்போ; மற்றொருபாக அசலையும் அப்பாகத்திற்கு அத்தேதி வரை உள்ள வட்டியையும்; 1-7-1958 தேதியிலோ அதற்கு முன்போ பாக்கி அசல் வட்டித் தொகைகளையும் செலுத்திவர விவசாயிகளுக்கு உரிமை உண்டு. இது தான் இச்சட்டத்தால் விவசாயிகளுக்கு அளிக்கப்படும் முக்கியமான சலுகையாகும். வேறு சட்டங்களிலோ, வழக்கப்படிக்கோ, ஒப்பந்தப்படிக்கோ, அல்லது கோர்ட் டிகிரிகளின்படியோ வேறு விதமாக இருந்த போதிலும், விவசாயியானவர் தாம் கொடுக்க வேண்டிய அசல் வட்டிக் கடன் தொகைகளை இச்சட்டத்தில் கண்ட தவணைகளின்படி திருப்பிக் கொடுக்க உரிமை உள்ளவராவார். டிக்ரிகள் சம்பந்தப்பட்ட வரையில் கோர்ட்டில் ஏற்பட்டிருக்கும் டிக்ரித் தொகைதான் அசலாகப் பாவிக்கப்படும்.

## இச்சட்டத்திற்கு முன் ஏற்பட்ட டிக்ரிகள்

இச்சட்டத்திற்கு முன் ஏற்பட்ட டிக்ரிக்கடன்கள் சம்பந்தப் பட்டவரையில், கடன் கொடுக்க வேண்டியவர், மேலே கண்ட

செக்ஷன் 4(2) தவணைகளின்படி தொகை கொடுக்கத் தவறினால், எந்தத் தவணை கொடுபடாமல் பாக்கி இருக்கிறதோ அத்தவணைத் தொகைக்கு மட்டுமே தான் வாதி டிக்ரியை நிறைவேற்றலாம்.

## இச்சட்டம் வந்த பிறகு தாக்கலாகும் தாவாக்கள்

இச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகு போடப்படும் தாவாக்களில், மேலேகண்ட தவணைகளில் எந்தத் தவணைகளுக்கு விவசாயி

செக்ஷன் 4(3) யானவர் தொகை செலுத்தியிருக்க வேண்டுமோ அத்தவணைகளில் அவர் கொடுக்கவேண்டிய தொகையை மட்டில் உடனே கொடுத்து விடும்படியும், பாக்கித்தொகையை இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பாக்கித் தவணைகளின்படி கொடுத்து விடும்படியும் டிக்ரி ஏற்படும்.

## இச்சட்டம் வரும் போது ‘பெண்டிங்’கில் இருக்கும் தாவாக்கள்

செக்ஷன் 4 (4)

இச்சட்டம் அமுலுக்கு வந்த தேதியில் முடிவடையாமல் ‘பெண்டிங்’கில் இருக்கும் தாவாக்களில் பிரதிவாதியானவர் தாம் விவசாயி என்று பாத்தியம் கொண்டாடி அவர் விவசாயி என்றும் ஏற்பட்டால், அவர் இந்தச் சட்டத்தில் கண்ட தவணைகளின்படி அது வரையில் அவர் கொடுத்திருக்க வேண்டிய தொகைகளை மட்டில் உடனே கொடுத்து விடும்படியும், பாக்கித் தொகைகளை இச்சட்டத்தில் கண்ட தவணைக் கெடுக்களின்படி கொடுத்துவிட வேண்டுமென்றும் டிக்ரி ஏற்படும்.

## இச்சட்டத்திலிருப்பதை விட விவசாயிக்கு அதிகமான சலுகைகள் கொடுக்கவும் கோர்ட்டுக்கு அதிகாரம் உண்டு.

செக்ஷன் 4 (5)

கடன் கொடுக்கவேண்டியவர் மீது டிக்ரி செய்யும்போதோ, நிறைவேற்று மனுக்களில் உத்தரவுகள் பிறப்பிக்கும் போதோ, வழக்கின் எல்லாச் சந்தர்ப்பங்களையும் ஆராய்ந்ததின் பேரில் கோர்ட்டார் தாமாகவோ, அல்லது கட்சிக்காரர்கள் ஒத்துக்கொள்ளுவதன் பேரிலோ, இச்சட்டத்தில் கண்டிருக்கும் சலுகைகளைவிட, கடன் கொடுக்கவேண்டியவருக்கு அதிக அனுகூலமுள்ள ஷரத்துக்களையும் நிபந்தனைகளையும் கண்டு டிக்ரி செய்யவும் நிறைவேற்று மனுவின் பேரில் உத்தரவு செய்யவும் கோர்ட்டுக்கு அதிகாரம் உண்டு.

## விவசாயிமீதும், விவசாயி அல்லாதவர் மீதும் சேர்ந்து ஏற்படும் டிக்ரிகளும் உத்தரவுகளும்

செக்ஷன் 4 (6)

ஒரு விவசாயியும் விவசாயி அல்லாதவரும் சேர்ந்து கொடுக்க வேண்டிய கடன்களைப் பொறுத்த தாவாக்களை டிக்ரி செய்யும்போதும், அவ்வித டிக்ரிகளை நிறைவேற்றக் கொடுக்கப்படும் மனுக்களிலும்; விவசாயி கொடுக்க வேண்டிய கடன் சம்பந்தப்பட்ட வரையில் மேலே கண்டபடி டிக்ரி அல்லது உத்தரவு செய்யவேண்டும். விவசாயி அல்லாத பிரதிவாதி சம்பந்தப்பட்டவரையில் அவ்வழக்கின் ரீதிக்குத் தக்கபடி, யுக்தமாகத் தோன்றும் விதம் டிக்ரி செய்யவும், உத்தரவு பிறப்பிக்கவும் கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு.

செக்ஷன் 4 (7)

டிக்ரிகளை 12 வருடங்களுக்குள் நிறைவேற்றி விடவேண்டுமென்ற சிவில் வழக்கு முறைச் சட்டத்தின் செக்ஷன் 48 (b) என்ற ஷரத்து சம்பந்தப் பட்ட வரையில் இச்சட்டத்தில் செக்ஷன 4 (1) ஷரத்தில் கண்ட தவணைகளைக் கோர்ட்டார் பிந்திய உத்தரவு மூலம் பிறப்பித்ததாக பாவிக்கப்படும்.

## விவசாயிகள் கொடுக்கவேண்டிய கடனைக் கோர்ட்டிலேயே கட்டி விடலாம்.

செக்ஷன் 5 (1)

ஒரு விவசாயி கொடுக்கவேண்டிய கடன் தொகையை இச்சட்டத்தின் செக்ஷன் 4ல் கண்ட தவணைக் கெடுக்களின் படி கோர்ட்டில் கட்டிவிட்டு மனுப் போடலாம். தாம் கொடுக்க வேண்டிய கடனைப் பொறுத்து ஏற்கனவே டிக்ரி ஏற்பட்டிருந்தாலும், இல்லாவிட்டாலும், தவணைப் பணத்தைக் கோர்ட்டில் கட்டி மனுப்போட விவசாயிக்கு உரிமை உண்டு. அவரவர் தாம் கொடுக்க வேண்டிய குறிப்பிட்ட தவணைத் தொகைகள் கொடுக்கப்பட்டு, கடனின் ஒரு பாகம் தீர்ந்துவிட்டதென உத்தரவு பிறப்பிக்குமாறு கேட்டு அம் மனுப் போடவேண்டும். கடன் கொடுத்தவர் தாவா செய்வதாக இருந்தால், எந்தக் கோர்ட்டில் தாவா செய்ய வேண்டுமோ, அக் கோர்ட்டில் மனுப்போட வேண்டும். அல்லது, விவசாயி கொடுக்க வேண்டிய கடனைப் பொறுத்து ஏற்கனவே கோர்ட்டில் டிக்ரி ஏற்பட்டிருந்தால், எந்தக் கோர்ட்டில் டிக்ரி ஏற்பட்டிருக்கிறதோ, அக் கோர்ட்டிலேயே தொகையைக் கட்டி மனுப் போடவேண்டும்.

செக்ஷன் 5 (2)

மனுதார் கட்டிய தொகை சரியாக இருந்தால், கோர்ட்டில் அதை ஏற்றுக்கொண்டு அவர் கொடுக்கவேண்டிய கடனின் ஒரு பாகம் தீர்ந்துவிட்டதாகக் கோர்ட்டால் உத்தரவு பிறப்பிக்கப் படும்.

செக்ஷன் 5 (3)

ஆனால் (1) மனுதார் இச் சட்டப்படி “விவசாயி” யாக இல்லாவிட்டாலும் சரி (2) கட்டப்பட்டிருக்கும் தொகையானது இச்சட்டத்தில் சலுகை காண்பிக்கப்பட வேண்டிய ஒரு ‘கடனு’க்காக அல்லாமல் இருந்தாலும் சரி (3) கட்டப்பட்ட தொகையானது குறைவாக இருந்து, கோர்ட்டால் கொடுக்கப் படும் கெடுவுக்குள் மனுதார் பாக்கித் தொகையைக் கட்டத் தவறி விட்டாலும் சரி— மனு தள்ளுபடி செய்யப்படும்.

தவணைத் தொகை கட்ட இன்னும் அதிகக் கெடு வேண்டுமென்று கேட்டு விவசாயி கோர்ட்டுக்கு மனுப் போடலாம்.

செக்ஷன் 5 (4)

மேலே கண்ட விதம் கோர்ட்டில் தொகை கட்ட உரிமையுள்ள விவசாயியானவர், தாம் எந்தத் தவணைத் தொகை கட்டவேண்டிய தேதிக்கு முன்பேயும் கோர்ட்டில் மனுக் கொடுத்து, தவணைத் தொகை பூராவையுமோ அதன் ஒரு பாகத்தையோ செலுத்த வேண்டியதற்கான கெடுவை நீடித்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்கலாம். இம்மனுவின் பேரில், கடன் கொடுத்தவருக்கு நோட்டீசு அனுப்பி, தவணைத் தொகைப் பூராவையுமோ ஒரு பாகத்தையோ கட்டுவதற்கான கெடுவை நீடிப்பது யுக்தமாகத் தோன்றினால் யுக்தமாகத் தோன்றும் காலத்திற்கு கெடுவை நீடிப்பதற்குக் கோர்ட்டுக்கு அதிகாரம் உண்டு. தவணைத் தொகையை விவசாயி எந்தக் கோர்ட்டில் கட்டவேண்டுமோ, அதே கோர்ட்டில்தான் இவ்வித மனுப் போடவேண்டும்.

செக்ஷன் 5 (5)

தவணைத் தொகையைக் கோர்ட்டில் கட்டிப் போடப்படும் மனுவும், தவணை கெடுவை நீடிப்பதற்காகப் போடப்படும் மனுவும், சிவில் வழக்குமுறையைச் சட்டத்தில் தாவாக்களை விசாரிப்பதற்காக ஏற்பட்டுள்ள முறைப்படியே விசாரிக்கப்படும்.

## அப்பீல் உண்டு.

செக்ஷன் 6

மேலே கண்ட மனுக்களில் ஏற்படும் உத்தரவுகளின் பேரில் அப்பீல் உண்டு. அதாவது சிவில் வழக்கு முறைச் சட்டத்தின் செக்ஷன் 47 ன்படி நிறைவேற்று மனுக்களில் ஒரு டிக்ரியை நிறைவேற்றுவது, டிக்ரியைத் தீர்ப்பது அல்லது பைசல் செய்வது சம்பந்தமான உத்தரவுகளின் மீது எப்படி அப்பீல் செய்யலாமோ அதே விதம் அப்பீல் செய்யலாம்.

## கடனாளி தம்முடைய ஸ்தாவர சொத்துக்களைப் பராதீனம் செய்தால்

செக்ஷன் 7

(1) இச்சட்டப்படி அனுகூலமடையக் கூடிய விவசாயி கடனாளியானவர் 1—10—1953க்குப் பிறகும் தாம் கொடுக்க வேண்டிய கடனைப் பூராவும் திருப்பிக் கொடுப்பதற்கு முன்பும் தம்முடைய ஸ்தாவர சொத்துக்களை பராதீனம் செய்திருந்தால்—அப் பராதீனத்தைப் பற்றி ஏற்படும் தாவா அல்லது நடவடிக்கைகளில் அப்பராதீனமானது கடன்காரர்களை மோசம் செய்யும் எண்ணத்துடனே அல்லது கடன்காரர்களைத் தாமதப் படுத்தும் எண்ணத்துடனே செய்த பராதீனமாக பாவிக்கப்படும். ஆனால் அவ்வித எண்ணத்துடன் பராதீனம் செய்யப்படவில்லை என்பதையும் ருசுப்பிக்கலாம்.

(2) மேற்கண்ட எண்ணத்துடன் ஒரு விவசாயி கடனாளியானவர் வேறு ஒருவருடன் ஒக்குமத்தாக இருந்துகொண்டு தமமுடைய ஸ்தாவர சொத்துக்களை 1—10—1953 க்குப் பிறகு கோர்ட் மூலம் ஏலம் போகும்படி விட்டு விட்டாலும், அதனால் ஏமாந்து போன அல்லது தாமதப் படுத்தப்பட்ட கடன்காரர் இஷ்டப்பட்டால் அக்கோர்ட் ஏலம் செல்லாதெனச் செய்ய அவருக்கு உரிமை உண்டு,

## காலாவதி

செக்ஷன் 8

கடனை வசூல் செய்யத் தாவா போடுவதற்காகவோ, அல்லது கடன் சம்பந்தமான டிக்ரியை நிறைவேற்ற மனுக் கொடுப்பதற்காகவோ, காலாவதி கெடுக் கணக்குச் செய்வதில் இச் சட்டத்தின் 3-வது செக்ஷன்படி தாவாவோ மனுவோ போடக் கூடாதென்று தடை விதிக்கப்பட்டிருக்கும் காலத்தை (4 மாதங்களை) நீக்கிக் கணக்குச் செய்யவேண்டும்

செக்ஷன் 9

ஒரு விவசாயி தனிமையிலோ. அல்லது விவசாயி அல்லாதவருடன் சேர்ந்தோ கொடுக்க வேண்டிய கடனைப் பொறுத்து, விவசாயியானவர் இச்சட்டத்தின் 4, 5 செக்ஷன்களில் கண்டவிதம் தவணைத் தொகை கொடுத்தாலும், கோர்ட்டில் கட்டினாலும்; அவ்விதம் செய்த தேதியிலிருந்து மறுபடியும் காலாவதி கெடு ஆரம்பமாகும். அதாவது அத்தேதியிலிருந்து விவசாயி, விவசாயி அல்லாதவர் இருவர் சம்பந்தப்பட்ட வரையிலும் காலாவதி கெடு புதிதாக ஆரம்பமாகும்.

## விதிகள்

செக்ஷன் 10

இச்சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான விதிகளைச் சென்னை ராஜ்ய சர்க்கார் இயற்றலாம். சர்க்காரால் இயற்றப்படும் விதிகள் பிரசுரமானவுடன் அவைகள் சென்னைச் சட்ட மன்றத்தின் இரண்டு சபைகளுக்கும் சமர்ப்பிக்கப்படும். அவ் விதிகளை அந்த கூட்டத்தில் ரத்துச் செய்யவும் திருத்தவும் சட்ட மன்றத்திற்கு உரிமை உண்டு.

# The Madras Indebted Agriculturists (Repayment of Debts) Act 1955.

*[ Act No. I of 1955. ]*

[ The following Act of the Madras Legislature received the assent of the President on the 27th February, 1955. ]

## An Act to give relief to indebted Agriculturists in the State of Madras.

Whereas it is expedient to enable the indebted agriculturists to repay their debts in easy instalments;

Be it enacted in the Sixth Year of the Republic of India as follows:—

1. Short title, extent and commencement:—(1) This Act may be called the Madras Indebted Agriculturists (Repayment of Debts) Act, 1955.

(2) It extends to the whole of the State of Madras.

(3) It shall be deemed to have come into force on the 1st March 1955.

2. Definitions:—In this Act, unless the context otherwise requires,—

(a) 'agriculturist' means a person who has an interest other than interest as a simple mortgagee in any agricultural or horticultural land not being a land appurtenant to a residential building, but shall not include—

(i) any person liable to pay land revenue (which shall be deemed to include peshkush and quit rent) exceeding one hundred and fifty rupees per annum in any year after 1952—53;

(ii) any person assessed to profession tax on income derived from a profession other than agriculture under any law governing municipal or local bodies in India on a half-yearly income of more than nine hundred rupees in any half-year after 1952—53;

(iii) any person assessed in any half year after 1952—53 to property or house tax on an annual rental value of Rs. Six hundred in respect of buildings (other than a building in which he lives) or lands other than agricultural lands under any law governing Municipal or local bodies in India;

(iv) any person assessed to sales tax on a total turnover of not less than twenty thousand rupees in any year after 1952-53 under the Madras General Sales Tax Act 1939 (Madras Act IX of 1939) or under the law of any other State relating to sales tax;

(v) any person assessed to income tax unter the Indian Income tax Act 1922 (Central Act XI of 1922) in any year after 1950—51;

(vi) a firm registered under the Indian Partnership Act 1932 (Central Act IX of 1932), or a company as defined in the Indian Companies Act, 1913, (Central Act VII of 1913), or a corporation formed in pursuance of an Act of Parliament of the United Kingdom or of any special Indian Law.

Explanation I. Where a joint Hindu family or tarward, tavazhi, kutumba or kavaru, is an agriculturist, every coparcener or member of the tarward, tavazhi, kutumba or kavaru, as the case may be, shall be deemed to be an agriculturist provided that he does not fall under any of the categories specified in sub clauses (i) to (v).

Explanation II. The provisions of this Act shall not apply to any person who though an agriculturist was not an agriculturist on the 1st October, 1953.

(b) 'debt' means any liability in cash or kind, whether secured or unsecured, due from an agriculturist on the 1st October 1953 whether payable under a contract or decree or order of a court, civil or revenue, or otherwise, but shall not include—

(i) any sum payable to the State or the Central Government or to any local authority;

(ii) any sum payable to any co-operative society including a land mortgage bank, registered or deemed to be registered under the Madras Co-operative Societies

Act, 1932 (Madras Act VI of 1932), provided that the right of the society to recover the sum did not arise by reason of an assignment made subsequent to the 1st October 953.

(iii) any liability arising out of a breach of trust;

(iv) any liability in respect of maintenance;

(v) any liability in respect of wages or remuneration due as salary or otherwise for services rendered or

(vi) any liability incurred or arising under any Chit Fund Scheme.

Explanation I. Where a debt has been renewed or included in a fresh document executed after the 1st October 1953 whether by the same debtor or by his heirs, legal representatives or assigns or by any other person acting on his behalf or in his interest, or as a result of a partition, in favour of the same creditor or his heirs, legal representatives or assigns or any other person acting on his behalf or in his interest, or as a result of a partition, the amount outstanding on the ist October 1953 and included in the document executed after the 1st October 1953, shall alone be treated as the debt for the purposes of this Act.

Explanation II. Where a debt has been split up after the 1st October 1953 among the heirs, legal representatives or assigns of a debtor or a creditor or as a result of a partition and fresh documents have been executed in respect of different portions of the debt each of the different portions shall be a debt for the purposes of this Act.

3. Bar of suits and applications:—(1) No suit for recovery of a debt shall be instituted, and no application for execution of a decree in respect of a debt shall be made, against any agriculturist in any civil or revenue court, before the expiry of four months from the commencement of this Act.

Explanation I. Where a debt is payable by an agriculturist jointly or jointly and severally with a non-agriculturist, no suit or application of the nature mentioned in this sub section shall be instituted or made either against the non-agriculturist or against the agriculturist before the expiry of the period mentioned in this su section.

Explanation II. For the purposes of this Act, a suit in which a decree in respect of a debt is prayed for shall be deemed to be a suit for the recovery of a debt notwithstanding that other reliefs are prayed for in such suit and a decree shall be deemed to be a decree in respect of a debt notwithstanding that other reliefs are granted in such decree:

Provided that a suit for possession of land shall not be deemed to be a suit for recovery of a debt by reason merely of mesne profits being also prayed for in such suit;

provided further that nothing contained in this section shall apply to any portion of a decree other than that relating to a debt.

(2) Where a creditor files a suit for recovery of a debt during the period specified in the sub section (1) or after the agriculturist has paid or deposited into court the sums and instalments specified in sub section (1) of section 4 and during the period when he is so entitled to pay, the court shall in decreeing the suit direct the plaintiff to bear his own costs and pay the costs of the defendant who is an agriculturist:

Provided that nothing contained in this sub-section shall be a bar to the court passing any order as to costs as between the plaintiff and other defendants who are not agriculturists.

4. Payment of debt in instalments.—(1) Notwithstanding any law, custom, contract or decree of court to the contrary, an agriculturist shall be entitled to pay within four months of the commencement of this Act, the interest due on any debt due by him up to the commencement of this Act and One Eighth of the principal outstanding, or One Fourth of the total amount outstanding which-ever is less, and the balance of the debt in three equal annual instalments on or before the 1st July of each of the suceeding three Years with the interest due on such instalment up to that date.

Explanation:— In the case of a decree the amount decreed shall be deemrd to be the principal.

(2) Where in respect of a decree for debt passed before the commencement of this Act, a debtor fails to make any one of the payments specified in sub section (i) the decree-holder shall be entitled to execute the decree in respect of the instalment which is in default.

(3) In any suit filed after the commencement of this Act, the court, in decreeing the suit shall provide for the immediate payment of such instalment or instalments as would have become due under provisions of sub section (i) and the balance in further instalments as specified therein.

(4) Where in any suit for the recovery of a debt pending at the commencement of this Act, the debtor claims to be an agriculturist, the court shall, if the debtor is an agriculturist, pass a decree for immediate payment of such instalment or instalments as would have become payable under the provisions of sub section (i) and the balance in further instalments as specified therein.

(5) Nothing contained in this Act shall bar the court from passing a decree or making an order in an application for execution of the decree under such terms and conditions as may be more favourable to the debtor than those provided for in this section either of its own motion upon a consideration of all the circumstances of the case or upon an agreement between the parties.

(6) Where in any suit to recover a debt or in any application for the execution of a decree therefor the debt is payable by an agriculturist jointly or jointly and severally with a non-agriculturist, the court shall pass a decree or make an order for the payment of the debt found due from the agriculturist as provided in this section as against the agriculturist and make such provision in the decree or order against the non-agriculturist as the circumstances of the case may warrant.

(7) The provisions of sub section (1) shall for purposes of execution be deemed to be a subsequent order of court within the meaning of clause (b) of Section 48, of the Code of Civil Procedure, 1908, (Central Act V of 1908).

5. Deposit of debt into Court:—(1) An agriculturist may deposit any of the instalments as provided in section 4 into the court having jurisdiction to entertain a suit for recovery of the debt or into the court which passed the decree, as the case may be, and apply to the court to record part satisfaction of the debt.

(2) Where any such application is made, the court shall pass an order recording part-satisfaction of the debt, if the amount deposited is the correct amount.

(3) The court shall dismiss the application—

(a) if the applicant is not an agriculturist, or

(b) if the liability is not a debt, or

(c) if the amount deposited is insufficient, and the applicant on being required by the court to deposit the deficit amount within a time fixed by the court, fails to do so,

(4) Any agriculturist entitled to make such deposit may, before the date on which any instalment is due, apply to the court having jurisdiction under sub-section (i), for an extension of time for making the deposit of the whole or any portion of such instalment and the court may, after notice to the creditor, extend the time for payment of such instalment or part thereof, for such period as it thinks fit.

(5) The procedure laid down in the Code of Civil Procedure, 1908 (Central Act V of 1908), for the trial of suits, shall as far as may be, apply to the applications under this sections.

6. Appeals:— An appeal shall lie from an order passed by a court under section 5, as if such an order relates to the execution, discharge or satisfaction of a decree within the meaning of section 47 of the Code of Civil Procedure, 1908 (Central Act V of 1908).

7. Presumption, as to transfer of immovable property of the debtor:— (1) Every transfer of immovable property made by a debtor entitled to the benefits of this Act, after the 1st October 1953, and before the complete discharge of his debt, shall, in any suit or other proceeding with respect to such transfer, be presumed until the contrary is proved, to have been made with intent to defeat or delay the creditors of the transferor.

(2) Where a debtor entitled to the benefits of this Act has allowed, in collusion with another, his immovable property to be sold after the 1st October 1953, through court with a view to defeat or delay his creditors, the sale shall be voidable at the option of any creditor so defeated or dealayed.

8. Exclusion of time for limitation:— In computing the period of limitation for a suit for recovery of a debt or an application for the execution of a decree in respect of a debt, the time during which the institution of the suit or the making of the application was barred under section 3 shall be excluded.

9. Effect of payment or deposit under section 4 or section 5:— Where a debt is payable by an agriculturist either by himself or jointly or jointly and severally with a non-agriculturist and where the agriculturist makes payment or deposits amount towards that debt as provided for in section 4 or section 5, a fresh period of limitation shall be computed from the time when the payment or deposit was made both against the agriculturist and non-agriculturist.

10. Power to make rules:— (1) The State Government may make rules for carrying out the purposes of this Act.

(2) The rules so made shall be placed on the table of each House of the Legislature as soon as they are published, and shall be subject to such modification, whether by way of repeal or amendment, as the Legislature may make during the session in which they are so laid.

---

187787

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தில் இருக்கும் இது சம்பந்தமான விதி விலக்கின்படி இது செல்லும் என உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டு இவ்வழக்கில் தீர்ப்பளித்தனர். பொதுவாகத் தொழில் உலகத்தில் முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்குமிடையே அமைதி நிலவ வேண்டிய நிமித்தம் நீக்கப்பட்ட ஒரு தொழிலாளரை மீண்டும் வேலையில் அமர்த்திக் கொள்ள வேண்டியிருக்கும். அவ்விதம் செய்யும்படி அதிகாரம் அளிக்கும் தொழில் சட்டங்கள் நியாயமானவை தான்; பொது மக்களின் நலத்திற்காகத் தான் அவை இருக்கின்றன. ஆகையால் இந்தச் சட்ட ஷரத்துக்கள் முதலாளியின் தொழில் சுதந்தரத்தை ஒரு வகையில் பாதித்தாலும் அவை அரசியல் அமைப்புச் சட்டத்தால் அனுமதிக்கப்பட்டவையே என உயர் நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

வேலையிலிருந்து நீக்கப்பட்ட கோபாலை மறுபடியும் கம்பெனியார் வேலைக்கு அமர்த்திக் கொண்டு, அது வரை உள்ள சம்பளப் பாக்கியையும் அவருக்குக் கொடுக்க வேண்டுமென்று தொழில் டிரிபுனல் கோர்ட் அளித்த தீர்ப்பு உறுதியாயிற்று.

# சர்க்கார் அறிக்கைகள்

## ‘பான்புரோகர்’ அல்லது ஈட்டின் மீது கடன் கொடுப்பவர்கள் லைசென்சுக் கட்டணம்.

1—4—1955 முதல் ‘பான்புரோக்கர் லைசென்சு’ அதாவது நகை முதலிய ஈட்டின் மீது கடன் கொடுத்து லேவாதேவி செய்பவர்கள் பான்புரோக்கர் சட்டப்படி வாங்கிக்கொள்ள வேண்டிய லைசென்சுக்காகக் கட்டணம் ரூ. 25- ஆக சென்னை சர்க்கார் நிர்ணயம் செய்திருக்கின்றனர் (9—3—55 தேதி சென்னை சர்க்கார் கெஜட்.)

## விற்பனை வரி விதி விலக்கு

1—4—1955 முதல் அடியில்கண்ட பண்டங்களுக்கு விற்பனை வரி கிடையாது என்று சென்னை சர்க்காரால் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அவையாவன:— வெங்காயம், உருளைக்கிழங்கு, வெற்றிலை, வாழை இலை, கூட்டுறவு சங்கங்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் பதனி; கூட்டுறவு சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் குடிசைத் தொழில் சரக்குகள். (9—3—1955 சென்னை சர்க்கார் கெஜட்.)

---

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUVADAMARUDUR AND PUBLISED BY, R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, FOR SOUTHERN BOOK HOUSE LTD, Editor V. S. VIJAYARAGAVACHARI, B.A., B.L.




**மேனி அழகு மட்டும் இருந்தால் போதாது!**
**ஆடை அழகும் வேண்டும்!**
**ஆடை அழகு பெற**

**—: அறந்தாங்கி :—**

# 786 சங்கு சோப்பை

**வாங்கி உபயோகியுங்கள்**
**கட்டி 1-க்கு அணு 0-1-3தான்**




தயாரிப்பவர்:-

**இ. கா. ரு. மு. காதர் நயினு முகம்மது,**
**786 சங்கு சோப் ஒர்க்ஸ், அறந்தாங்கி S. Ry.**


---

## ஓர் முக்கிய அறிவிப்பு.

மக்களுக்கு வேண்டியது மூன்று சுத்தம். அதாவது, மனம், வாக்கு, காயம். அதிலே பிரதானம் காயசுத்தி, காயசுத்தி இல்லாமல் எந்த மனிதனும் அதாவது, பாட்டாளி முதல் - பணக்காரர் வரையிலும் (சிறிய உத்யோகஸ்தர் முதல் பெரிய ஆபீஸர் வரையில்) அவரவர்கள் வேலையை சரிவர கவனிக்க இயலாது என்பது மறுக்க முடியாத உண்மை. ஆகவே அதற்காகச் செய்யப் பட்ட அற்புத மருந்து ஜெயராம் காயசுத்தி லேகியம்.

**ரிஜிஸ்டர் நெ. 138512**

# 'ஜெயராம்' காயசுத்தி லேகியம்




குடல், இரைப்பை கோளாறுகளாகிய தீராத வயிற்றுவலி, ஓயாத வாந்தி, புளித்தேப்பம், வயிற்றுப்பிசம், நெஞ்சு முதுகு, இடுப்புவலி, கிருமிகளின் உபாதை, மூலநோய், நாள்பட்ட மலச்சிக்கல் முதலியவைகளைப் போக்கி ஜீரண சக்தியைக் கொடுத்து உடலுக்குப் புதியசக்தியையும், இரத்த சுத்தியையும் அளிக்கும். இரண்டே வேளையில் ஆச்சரியமான குணம் தெரியும். போலிகள் அதிகம் இருப்பதால் மேலே கண்ட ரிஜிஸ்டர் நெ. 138512-ஐ கவனித்து வாங்கவும்.

**1 சேர் ரூ. 4-8.** **½ சேர் ரூ. 2-4.**

**வி. பி. பி. செலவு தனி.**

தயாரிக்குமிடம் :—

**G. ஜெயராம் வைத்தியசாலை,**
**28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, :: கும்பகோணம்.**

குடல், இரைப்பை, கோளாறுகளுக்கு ஆபரேஷன் தேவையில்லை.

Regd. No. M. 5399 "THE VAKIL" March - April 1955

ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57. விலாசம் "கோகுல்"

# டி. எஸ். ஆர். & கோ..

## கும்பகோணம்

REGISTERED TRADE MARK



பிராஞ்சு: (மன்னார்குடி.)

கூந்தலுக்கு வளர்ச்சியும் மூளைக்குக் குளிர்ச்சியும் கொடுப்பதில் நிகரற்ற சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம், கோகுல் கூந்தல் தைலம், வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள், பன்னீர், இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

*Sole Agents:*

For Madras
SURAJ AGENCIES,
MADRAS.

*For Coimbatore, Palghat & Nilgiris:*
B. BALAPATTABI CHETTIAR,
249, Vysyal Street.
COIMBATORE.